
பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று





| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா ... ... ... | 3—0 |
| 6 மாத சந்தா ... ... ... | 1—12 |

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்,

| | ரூ. அ. |
|---|---|
| வெளி நாட்டிற்கு சந்தா ... | 4—0 |
| விளம்பரம் அங்குலம் 1-க்கு ... | 0—8 |

மாலை 1. | அக்ஷய-ஞு சித்திரை-மீ 6-உ (18—4—26) ஞாயிற்றுக்கிழமை, ஈரோடு. | மலர் 47.



மகாத்மா காந்திக்கு ஜே!
வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்!!

## திருப்பூர்
## சுத்த கதர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப் பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப்பீசுகள் ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி திணுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அரசுவேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100-க்கு 25 ரூ. வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கதர் டிபோ, திருப்பூர், (தென் இந்தியா,)

---

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர்.

தமிழ்நாட்டு கத்தர் போர்டாரால் அத்தாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் கெட்டி அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள் துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள். ஷர்ட்டிங், கோட்டிங், சால்வை திணுசுகள். கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும், தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

எஸ். ராமசாமி அய்யர்,
ராம விலாஸ் கதர் ஸ்டோர்ஸ், கரூர்.

(அத்தாட்சிப் பத்திரம்.)

(தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால், கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

எஸ். ராமநாதன், காரியதரிசி கத்தர் இலாகா

---

## திருப்பூர்
## சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி திணுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள், இன்னும் அநேக திணுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும், தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள். ஆர்டர் 100-க்கு 25 ரூபாய்வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சிப் பத்திரம்.)
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்,
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார்,
கத்தர் ஸ்டோர். திருப்பூர். (தென் இந்தியா.)

---

## காங்கிரஸ் அத்தாக்ஷி
## பெற்ற சுத்த கதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I. Ry.

---

## திருப்பூர்
## சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி திணுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக திணுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும், தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா
விலாசம்:—
ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

---

## கத்தர் வியாபாரிகளுக்கு
## அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான திணுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்.
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

## திருவாரூரில் ஸ்ரீமான்
# ஈ. வெ. ராமசாமி நாயக்கர்
## அவர்கள் பேசியதின் சாராம்சம்.

28—3—26.

திருவாரூர் தேசாபிமானச் சங்கத்தின் வருஷாந்திரக் கொண்டாட்டத்திற்கு அக்கிராசனம் வகித்து ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்கள் காந்தீயம் என்ற விஷயத்தைப்பற்றி செய்த உபந்நியாசமாவது:—

தேசாபிமானச் சங்கத்தாராலும் திருவாரூர் முனிசிபல் சித்தவைத்தியசாலையின் சார்பாகவும் தனித்தனியே வாசித்துக் கொடுக்கப்பட்ட உபசாரப் பத்திரங்களை பெற்றுக்கொண்டு அதற்கு பதில் சொல்லுகையில் இவ்வித உபசாரப் பத்திரங்கள் நமது நாட்டில் மிகவும் மலிந்துபோய்விட்டதென்றும் பெரும்பாலும் பொருத்தமற்றவர்களே கொடுப்பவர்களாகவும், வாங்கிக்கொள்கிறவர்களாகவும் இருக்கிறார்களென்றும் இது போல் நூற்றுக்கணக்கான இடங்களில் தனக்கு உபசாரப் பத்திரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அவைகளில் ஒன்றுக்காகிலும் தாம் பாத்திரமுள்ளவரல்லவென்றும் அவைகள் பெரும்பாலும் முகஸ்துதியாகவே முடிகிறதென்றும் கொடுப்பவர்களும் ஏறக்குறைய உபசாரப் பத்திரம் கொடுக்கத்தகுந்த காரியம் எதையும் கண்டு கொடுக்கிறதில்லையென்றும் உபசாரப் பத்திரம் யாருக்குக் கொடுக்கிறார்களோ அவர்களுடைய கொள்கையையும், சேவையையும் உணர்ந்து அதன்படி நடக்காதவர்களாகவேயிருக்கிறார்களென்றும் நமது தேசத்தில் தற்காலம் நடக்கும் எத்தனையோ புரட்டுகளில் இவ்வுபசாரப் பத்திரம் கொடுப்பதும் வாங்குவதும் ஒரு செல்வாக்குப் பெற்ற புரட்டு என்றும் தேசத்துக்கு நல்லகாலம் வரும்போது இந்தப் புரட்டுகளெல்லாம் தானாகவே மறைந்துபோகுமென்றும் அதுவரையில் தடுக்கமுடியாத இம்மாதிரி புரட்டுகளை அனுபவித்துத்தான் ஆகவேண்டுமென்றும் சொல்லிவிட்டு மேலே பேசியதாவது:

காந்தியம் என்பது மகாத்மா காந்தியை மூலபுருஷராய் வைத்து அவரது சரித்திரத்தையும் கொள்கையையும் அதன் பலனையும் பற்றியது. எப்படி சைவம் என்பது சிவனை முதன்மையாகக் கொண்டதோ வைணவம் என்பது விஷ்ணுவை முதன்மையாகக் கொண்டதோ ராமாயணம் என்பது எப்படி ராமனை முதன்மையாகக் கொண்டதோ அதுபோல் காந்தீயமென்பது காந்தியை முதன்மையாகக் கொண்டது. இவற்றில் மக்களுக்காக மகாத்மா காந்தி ஏற்படுத்திய கொள்கைகளும் அதற்காக அவரது சேவையும் அவரது தியாகமும் முதன்மையானது. அதினால் ஏற்பட்ட பலன்களும் நிகழ்ச்சிகளும் இரண்டாவதாகச் சொல்லலாம். நமது தேசத்தில் இவ்விருபதாம் நூற்றாண்டில் ராஜாக்களும், பிரபுக்களும் பெரும்பதவி அதிகாரமுடையவர்களும் எத்தனையோபேர் பிறந்திருந்தாலும், மறைந்திருந்தாலும் 33 கோடி மக்களும் மதிக்கத்தகுந்தமாதிரி மகாத்மா காந்தியைப்போல் மற்றொருவரை சொல்லமுடியாமற் போனதற்கு காரணம் என்ன? காந்தியை மாத்திரம் மகாத்மா என்று சொல்லக்காரணமென்ன? தங்கள் தங்கள் சுயநலத்துக்காக வாழ்கிறவர்கள். எவ்வளவு பெரியவர்களென்று சொல்லிக்கொண்டபோதிலும் அவர்கள் சாதாரண மனிதர்களாகத்தான் உலகத்தினரால் கருதப்படுவார்கள். உலகத்துக்காக வாழ்கிறவர்கள் எவ்வளவு சிறியவர்களாக இருந்தபோதிலும் மகாத்மாவாகத்தான் கருதப்படுவார்கள். அப்படியானால் உலகத்துக்காக வாழ்கிறதாகச் சொல்லிக்கொண்டு எத்தனையோ தலைவர்களிருக்கின்றார்களே, நாமும் அவர்களை எல்லாம் தலைவர்கள் தலைவர்களென்கிறோமே. ஏன் காந்தியை மாத்திரம் மகாத்மா என்று சொல்லவேண்டும் என்கிறதாக ஒருகேள்வி பிறக்கலாம் மகாத்மாவை தவிர மற்ற தலைவர்களெல்லாம் பிறத்தியாருக்குச்சொல்லமாத்திரம் தெரிந்தவர்களேயல்லாமல் அதுபோல் நடக்கமுடியாதவர்களும் நடக்க இஷ்டமில்லாதவர்களுமாகவேயிருப்பார்கள்; ஆனால் மகாத்மாவோ, சொல்லுகிறபடி நடப்பவர், நடக்கக்கூடியதையே சொல்லுபவர்; இந்தக் குணந்தான் அவரை மகாத்மாவாக்கியது. அவர் கண்ணுக்கு உண்மைதான் வெளிப்படும். அவருடைய மனமும் வாக்கும் உண்மையைத்தான் நினைக்கும். உண்மையைத்தான் பேசும். அவருடைய நோக்கமெல்லாம் ஏழைகளைப்பற்றியதாய்த்தானிருக்கும். அவருடைய கொள்கைகளெல்லாம் ஏழைகளின் கஷ்டத்தை ஒழிப்பதற்குத்தான் ஏற்படும். அவர் இந்தியாவின் விடுதலை என்பது ஏழைகள் விடுதலையைத்தான் குறிக்கும். மகாத்மாவின் சுயராஜ்யமே ஒடுக்கப்பட்டவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் சுயமரியாதையையும் சமத்துவத்தையுமே அடிப்படையாகக் கொண்டது. அவருடைய சேவை என்பது தியாகத்தையும் கஷ்ட மனுபவிப்பதையும் அடிப்படையாகக் கொண்டது. இந்தக் காரணங்களால் அவர் தானாகவே மகாத்மா ஆகிவிட்டார். உபசாரப் பத்திரங்களில்லையே வண்டியில்லையே ஊர்வலமில்லையே என்று விசாரப்படுகிறவர்களும் ஊர்வலத்தையும் உபசாரப்பத்திரத்தையும் நாடிக் கொண்டு திரிகிறவர்களும் தங்களைத் தலைவர்களென்று சொல்லவேண்டுமென்று பணங்கொடுத்து சொல்லச் செய்வோர்களும் பாமர ஜனங்களை ஏமாற்றி தாங்களும் தங்கள் குலத்தார்களும் மாத்திரம் மேன்மையடைய வேண்டுமென்று நினைத்துக்கொண்டு அலைவதையும் தேசசேவை பொதுஜன சேவை என்று சொல்லிக்கொண்டு திரிவார்களேயானால் அவர்களெப்படி மகாத்மாவாகக்கூடும்? பதவிகளையும் பட்டங்களையும் மனதில் குறிப்புக் கொண்டு சுயராஜ்யம் சம்பாதிப்பதற்காக சட்டசபைக்குப் போகிறேன் என்று சொல்லுகிறவர்களும் அதற்கு ஓட்டு சம்பாதிப்பதற்காக பணத்தைக் கொடுத்து பல்லாக்கு கூட்டிக்கொண்டு தங்களைத் தலைவர்கள் தலைவர்களென்று சொல்லும்படி செய்கிறவர்களும் எப்படிமகாத்மா ஆகக்கூடும். முதல் முதல் பாமர ஜனங்களுக்கு காந்தி யென்று ஒருவர் இருக்கிறார் என்று அறியவே தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களின் சுயமரியாதைக்காகதானும் தன் குடும்பமும் கூட்டோடு சிறை சென்றதும் அங்கு நினைக்க வொண்ணாத கொடுமைகளையெல்லாம் அனுபவித்ததுந்தான் முக்கிய காரணங்கள். அதற்குப் பிறகு இந்தியமக்களுக்கு இந்தியாவிலேயே சுயமரியாதை சமத்துவம் வேண்டுமென்ற சேவையில் இறங்கியதே 2-வது காரணம் ஆதற்குப் பிறகு ஏழைமக்களுக்கு வேண்டிய உண்மையான சுயராஜ்யத்தைக் கண்டுபிடித்து அதற்காக அஞ்சாது உண்மைபேசி பதினாயிரக்கணக்கான ஜனங்களை பின் பற்றும்படி செய்து தானும் அவர்களுமாய் சிறைசென்றதே மூன்றாவது காரணம். இன்னமும் அவருடைய கருத்தும் உழைப்பும் ஏழைகளையே பிரதானமாய்க் கொண்டிருக்கிறது ஆனால் ஏழைகள் விடுதலை பெற்றால் தாழ்த்தப்பட்டவர்கள் சுயமரியாதையடைந்தால் ஒதுக்கப்பட்டவர்கள் சமத்துவமடைந்தால் பிரபுக்களென்போருக்கும் படித்தவர்களென்போருக்கும் உயர்ந்த ஜாதியாரென்போருக்கும் தனியோக்கியதை இருக்காது என்கிற காரணத்தினால் இம்மூவர்களும் மகாத்மாவுக்கு எதிரிகளாயிருக்க வேண்டிய அவசிய மேற்பட்டுப் போய்விட்டது. அதன் பலனாய் மகாத்மாவின் கொள்கைகள் கொஞ்சங்கொஞ்சமாய் ஓய்வு பெறவேண்டியதாயிருக்கிறது. காந்தீய மென்னும் ஏழைகளை விடுதலை செய்ய ஏற்பட்ட இயக்கத்தை பரப்ப ஆயுதமாய்க் கொண்ட காங்கிரஸ் என்னும் சபையானது படித்தவர்கள்வசமும் உயர்ந்த ஜாதியார் என்று சொல்லுகிறவர்கள் வசமும் செல்வவான்கள் வசமும் சிக்கிக்கொண்டு போய்விட்டபடியால் படித்தவர்களுக்கு உத்யோகம் சம்பாதிப்பதற்கும் மேல் ஜாதியாரென்போருக்கு தங்களுடைய உயர்ந்தஜாதித்தத்துவத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் உபயோகப்படுத்திக் கொள்ளத் தக்கதாய்ப்போய்விட்டதோடு ஏழைகளின் நிலைமை நாளுக்கு நாள் அதோகதியாய் ஒரு வேளைக் கஞ்சிக்கு 2-தரம் மூன்றுதரம் தங்களுடைய கற்பை விற்க வேண்டிய ஸ்திரீகளையும் ஒரு வேளை சாப்பாட்டிற்காக ஏழை மக்களின் துரோகிகளின் பின்னால் திரிந்துகொண்டு அவர்களை இந்திரன் சந்திரன் என்று பாமர ஜனங்களிடம் புகழ்ந்து அவர்களுக்கு ஓட்டு வாங்கிக்கொடுக்க தங்கள் மனசாக்ஷியை விற்கத்தகுந்த ஆண்களையும் லக்ஷக்கணக்காய் பெருக்கி வருகிறது. இவ்வுண்மையறிந்த மகாத்மா இவர்களோடிருக்க மனம் பொருதவராகி தனியேபிரிந்து ஏழைகளுக்கு உழைப்பதற்கென்று ராட்டினமும் கையுமாய் உட்கார்ந்துகொண்டு இரவும் பகலும் ராட்டினத்தைச் சுற்றிக்கொண்டு ஏழைகளிடத்தில் அன்பிருக்கிறவர்களெல்லாம் ராட்டினத்தைச்சுற்றுங்கள், கதரை உடுத்துங்கள், ஏழைகளை காப்பாற்றுங்கள், சட்டசபையில் ஏழைகளுக்கான காரியம்ஒன்றுமில்லை. தேச விடுதலைக்கு சட்டசபையினால் ஒரு பலனும் உண்டாகாது. எனக்கு அதில் கொஞ்சமும் நம்பிக்கையில்லையென்று சொல்லிக்கொண்டிருக்கிறார். இதுதான் காந்தீயம் என்பது. காந்தீயம் என்பதை சுருக்கமாய்ச் சொல்வதானால் ராட்டினம் சுற்றுவதும் கதர் உடுத்துவதும்தான் என்று சொல்லலாம். மகாத்மாவின் சுயராஜ்யம் என்பதையும் சுருக்கமாய்ச் சொல்லுவதானால் தீண்டாமையை ஒழிப்பதும கதர் உடுத்துவதும்தான் என்று சொல்லலாம். ஏறக்குறைய 30,40 வருஷங்க

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

## தொழிலாளர் இயக்கம்

### தற்கால நிலைமை.

தற்காலம் நமது நாட்டிலுள்ள தொழிலாளர் இயக்கங்கள் என்று சொல்லப்பட்டவைகள் எடுப்பார் கைக் குழந்தைகள் போல் தங்களுக்கென எவ்வித சக்தியுமில்லாமலும் தங்களுக்கு தேவை இன்னதென்றுகூட அறிய முடியாமலும் தாங்களே தங்கள் சங்கத்தை நடத்திக்கொள்ள சக்தியற்றவர்களாகவும் இருந்துகொண்டிருப்பதுமல்லாமல் சுயநலத்திற்காகவும் வயிற்றுப் பிழைப்புக்காகவும் அரசியலில் சம்மந்தப்பட்டு அரசியல் பேரைச் சொல்லிக்கொண்டு வாழும் சில பொறுப்பற்றவர்கள் தொழிலாளர்களில் முக்கியஸ்தர்களாகவும் செல்வாக்குள்ளவர்களாகவும் இருப்பவர்களை பணம் கொடுத்தோ சுவாதீனம் செய்தோ அவர்கள் மூலமாய் தங்களை தொழிலாளர்களுக்கு தலைவர்களாகும்படி செய்து, அதன் மூலமாய் தலைமை பெற்ற சில சுயநலக்காரர்களை தங்களுக்கு தலைவர்களாக வைத்துக்கொண்டு அவர்கள் சொல்லுகிறபடி ஆடவும் ஒருவர்களை அடியென்றால் அடிக்கவும் திட்டும்படி சொன்னால் திட்டவும் இம்மாதிரியான காரியங்களைச் செய்துகொண்டு அவர்களின் கை ஆளுகள் போலிருந்து அன்னியரின் நன்மைக்காக தங்கள் சங்கங்களை விட்டுக்கொடுக்கும்படியான நிலைமையிலிருந்து வருகிறது. இவ்விதமான நிலைமையிலுள்ள சங்கங்கள் நாட்டிற்காவது தொழிலாளர்களுக்காவது என்ன நன்மையைக் கொடுக்க முடியும். உண்மையாகவே நம் நாட்டுத் தொழிலாளர்களுக்கு தங்களுக்குள்ளாகவே ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு தங்கள் நன்மைக்கு உழைக்க தங்களுக்குச் சக்தியில்லையானால் அரசியலில் தங்களை விளம்பரப்படுத்திக்கொண்டு வாழும் பொறுப்பற்றவர்களும் சுயநலக்காரர்களுமான அரசியல் தலைவர்களைவிட — பிராமணத் தலைவர்களைவிட அவர்கள் சொற்படி ஆடும் தலைவர்களைவிட இத்தொழிலாளர்களின் உண்மையான முதலாளிமார்களே மேலானவர்களென்று சொல்லவேண்டியிருக்கிறது. ஏனெனில் அரசியல் தலைவர்களென்போர் தொழிலாளர்களுக்கு தாங்கள் தலைவர்களாயிருக்கிறோமென்கிற பெருமையினாலும் அவர்களிடம் தங்களுக்கு செல்வாக்கு இருப்பதாய் பிரசங்கம்படி செய்து கொள்வதாலும் முதலாளிகளை மிரட்டி தங்கள் சொந்த நன்மை பெறுவதும் தங்கள் பிள்ளை குட்டிகளுக்கும் இனத்தார்களுக்கும் முதலாளிகள் தயவுபெற்று உத்தியோகங்கள் சம்பாதித்துக் கொடுப்பதும் தங்கள் தேர்தல் காலங்களில் ஓட்டுகள் பெறவும் தங்களுக்கு வேண்டிய வேறு அபேக்ஷகர்களுக்கும் ஓட்டு வாங்கிக் கொடுக்க பிரதிப் பிரயோஜனம் பெறுவதுமான காரியங்களுக்காகவே. பிழைப்பத்தனப்பட்டு தொழிலாளர் தலைவர்களாகிறார்களே யல்லாமல் உண்மையில் இவ்வரசியல் தலைவர்களும் பிராமணத் தலைவர்களும் தொழிலாளர் தலைவர்களாவதற்கு எவ்வித யோக்கியதை உடையவர்களுமல்ல. நம்பிக்கையுடையவர்களுமல்ல என்பதே நம்முடைய அபிப்பிராயம். அல்லாமலும் முதலாளிமார்கள் தொழிலாளர்களுக்கு ஏதாவது நன்மையோ தீமையோ செய்ய வேண்டுமானால் இம்மாதிரி தலைவர்களுக்கு வேறே பலமாதிரி லஞ்சம் கொடுக்கவேண்டி வருகிறது. எது நன்மை எது தீமை என்று அறிய முடியாத பாமர தொழிலாளிகள் தங்களுக்குள்ளேயே ஒரு தலைவனை எடுத்துக்கொள்ள யோக்கியதையும் ஆசாமியும் இல்லையானால் அவ்வித யோக்கியதை வரும் வரை தங்களுக்கு சங்கம் வேண்டாமென்றிருப்பதே நலமென்று கூடச் சொல்லலாம். அப்படிக்கில்லாமல் கண்டிப்பாய் தங்களுக்கு ஒரு சங்கம் இருந்துதான் தீரவேண்டுமென்கிற அவசியமிருக்குமானால் இவ்வித அரசியல் தலைவர்களைவிட முதலாளிகள் தலைமை அதிக மோசமானதல்ல வென்பதே நமது அபிப்பிராயம். அரசியல் தலைவர்கள் நமது தொழிலாளர்களை உபயோகப்படுத்திக்கொள்வதை பல தடவைகளில் நாம் நேரிலேயே பார்த்திருக்கிறோம். உதாரணமாக கொஞ்ச காலத்துக்கு முன் கோகலே ஹால் சவுந்தரிய மஹால் மகாஜனசபை முதலியபல இடங்களில் நடந்த அரசியல் சம்மந்தமான கூட்டங்களின் தீர்மானங்களுக்கும் தேர்தல்களுக்கும் தொழிலாளர்களின் ஓட்டுப் பெற்று வெற்றி பெறுவதற்காக தொழிலாளர்களிலேயே சில நாயகர்களும் அரசியல்காரர்களில் சில தலைவர்களென்போர்களும் முறையே பணம் வாங்கிக்கொண்டும் பணம் செலவு செய்தும் ஓட்டுச்சம்பாதித்துக் கொடுத்ததும் பெற்றதும் நேரில் அறிவோம். அல்லாமலும் சமீபகாலத்தில் நடந்த காங்கிரஸ் பெயரைச் சொல்லிக்கொண்டு பிராமணர் பிராமணரல்லாதார் கக்ஷி தேர்தல்களுக்கும் தொழிலாளர் நாயகர்களும் தலைவர்களும் முறையே 200—300 பணம் பெற்றும் சுய நலத்தைக் கோரியும் பிராமணர்களுக்கும் பிராமணர்கள் கக்ஷிக்கும் தொழிலாளர்களின் ஓட்டுகளை சேகரித்துக் கொடுத்ததை கேட்டு அறிவோம். இந்நிலையிலுள்ள நமது தொழிலாள சகோதரர்களுக்கு சங்கமிருந்து என்ன பிரயோஜனம். சங்கமில்லாமலிருந்தாலாவது ஓட்டுக் கொடுப்பதின் பலன் தங்களுக்கு நேரே வந்தாலும் வரலாம்.

இம்மாதிரி தலைவர்களைக் கொண்ட சங்கமிருக்கிற காரணத்தால் வேறு ஒருவர் சுயநலத்துக்கு இரண்டுமறியாத தொழிலாளர்கள் தங்களது ஓட்டுகளை விலைக்கு உபயோகிக்க நேரிடுவதும் இதன் கிரயத்தை மற்றவர்கள் அநுபவிக்க நேரிடுகிறதுமாய் முடிகிறது. இப்பொழுது கூட சில அரசியல் தலைவர் என்போர்களும் தொழிலாளர் நாயகர்களும் தொழிலாளர்களிடம் கவலையும் அன்பும் இருப்பதுபோல் காட்டுவதும் அவர்களுக்காக தாங்கள் பாடுபடுகிறவர்கள் போலப் பாசாங்கு செய்வதும் உஷார் உஷார் என்று சொல்வதும் விஷமிகள் சூழ்ச்சியில் சிக்காதீர்கள் பழைய சங்கத்தை காப்பாற்றுங்கள் என்று சொல்வதும் பக்கத்தில் வரப்போகும் தேர்தல்களுக்கு ஓட்டுச்சேகரிக்கவும் பணம் சம்பாதிக்கவும் கருதிக் கொண்டுதான், என்பதாக நாம் கோபுரத்தின் மேலிருந்து கூவுவோம்.

அல்லாமலும் இப்பொழுது தொழிலாளர்களுக்குத் தலைவர்களாயிருக்கிறவர்களெல்லோரும் ஏதாவது ஒரு விதத்தில் முதலாளிகளாய்த்தானிருக்கிறார்கள். ஒவ்வொரு தலைவர்களென்போர்களும் அநேகமாய் தங்களிடம் 500, 100, 50, 30, 20 கணக்கான தொழிலாளர்களை வைத்து வேலை வாங்குகிற முதலாளிகளும் அவர்கள் உழைப்பில் வயிறு வளர்க்கிறவர்களுமாயிருக்கிறார்களே தவிர உண்மையில் தொழிலாளர்களுக்கு அநுகூலமாயிருக்கவேண்டியவர்களாயில்லை. விவசாய சங்கத்துக்கு வியாபாரிகள் தலைவர்களாயிருப்பது போலவும் பிராமணரல்லாதார்களுக்கு பிராமணர்கள் மத குருவாயிருப்பது போலவும் இந்தியாவை ஐரோப்பா ஆளுவது போலவும் நமது தொழிலாளிகளுக்கு அரசியல் தலைவர்கள் என்று சொல்லும்படியானவர்கள் தலைவர்களாயிருக்கிறார்கள் என்று சொல்லுவது கொஞ்சமும் தவறாகாது. அரசியல் தலைவர்களான கசாப்புக்கடைக்காரன் மூலமாய் நமது தொழிலாளிகள் முதலாளிகளுக்கு உணவாவதைவிட நேரிலேயே போய்விட்டால் ஒருசமயமில்லாவிட்டாலும் ஒருசமயத்தில் முதலாளிகளுக்கு ஏவு இரக்கமுண்டானாலும் உண்டாகலாம்.

அல்லாமலும் அரசியல் தலைவர்கள் தாங்கள் தங்கள் நன்மைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் பல அரசியல் கக்ஷிகளை தொழிலாளர் சங்கங்களுக்குள் நுழையவைத்து அதன் காரணமாய் தொழிலாளர் சங்கங்களுக்குள்ளும் கட்சிகளை உண்டுபண்ணி அநாவசியமாய் பொதுஜனங்களிடத்திலும் முதலாளிமார்களிடத்திலும் வீண் வெறுப்புகளையும் துவேஷத்தையும் உண்டாக்கி தொழிலாளர்களை கஷ்டத்துக்கு உள்ளாக்குகிறார்கள். தொழிலாளர்களுக்கு வேலை செய்வதற்கும் தற்கால அரசியல் கட்சிகளுக்கும் என்ன சம்மந்தமிருக்கிறது. மகாத்மா கொள்கையைப்போல் தொழிலாளர் நன்மையே தேச விடுதலை, என்கிற கொள்கையுடைய அரசியல் கட்சிகளாயிருந்தால் அது நமது தொழிலாளர் சங்கத்திற்பிரவேசிப்பதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அப்படிக்கில்லாமல் தொழிலாளர்கள் ஓட்டுப்பெற்று உத்தியோகமும் பதவியும் பணமும் சம்பாதிப்பதற்காய் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் சுயராஜ்யக்கட்சி முதலிய பல அரசியல் கட்சிகளும் அவற்றின் தத்துவங்களை ஒத்துக்கொண்டிருக்கும் காங்கிரஸ் முதலியவைகளும் தொழிலாளர்களுக்கு என்ன நன்மை செய்யக்கூடும். உண்மையிலேயே தொழிலாளர் நாயகர்களுக்கு எந்த கட்சியார் அதிகம் பணம் கொடுக்கிறார்களோ அந்தக் கட்சியில் தொழிலாளர்கள் சேருகிறதாயிருக்கிறதேயல்லாமல் கட்சியின் தத்துவத்தை அறிந்து சேருவதாயில்லை. பிராமணர்களிடம் பணம் வாங்கிக்கொண்ட தொழிலாளர், களால் வசவு கேட்கும் ஜஸ்டிஸ் கட்சிகூட தொழிலாளர்கள் தங்கள் வசப்பார்களென்கிற காரணத்தினால் தொழிலாளர்களுக்கு பல நன்மைகள் செய்திருக்கிறதை நாம் கேட்டிருக்கிறோம். அதாவது சென்னையில் சில வருஷங்களுக்குமுன் ஏற்பட்ட தொழிலாளர் வேலை நிறுத்தங்களில் சில பிராமணத் தலைவர்கள் தொழிலாளர் சங்கத்தைக் கைவிட்டு விட்டபோதும் சில பிராமணரல்லாதார் சர்க்கார் தயவுக்கு ஆசைப்பட்டு தங்கள் உத்தியோகத்தைக் கொடுமையாய் நடத்தி தொழிலாளர்களை இம்சித்து

(இதன் தொடர்ச்சி அடுத்த பக்கம்)

பிரமோஷன் பெற்ற காலத்திலும் ஸ்ரீமான் ஸர் பி. தியாகராஜ செட்டியாரும் அவருடைய கட்சி மந்திரிகளும்தான் தொழிலாளர்களையும் சில தொழிலாளர் தலைவர்களையும் நாடு கடத்தவொட்டாமலும் சுட்டுக் கொல்ல முடியாமலும் காப்பாற்றியிருக்கிறார்கள். இந்த ரகசியங்கள் தொழிலாளர்களின் இரண்டொரு உண்மைத் தலைவர்கள் இன்னமும் மறவாமல் சொல்லிக்கொண்டுதானிருக்கிறார்கள். பழைய கதைகள் வேண்டாமென்று வைத்துக்கொள்வதானாலும் இப்பொழுதும் தொழிலாளர்களுக்குத் தலைவர்களாயிருக்கும் இவ் அரசியல் தலைவர்கள் தொழிலாளர்களிடம் உண்மையான அன்பு இருக்குமேயானால் சென்னை, நாகை, கோவை முதலிய இடங்களில் தங்கள் கட்சிக்காக நிறுத்தப்போகும் சட்ட சபை ஸ்தானங்களுக்கு தொழிலாளர்களிலேயே சில பிரதிநிதிகளை ஏன் நிறுத்தக்கூடாது. தொழிலாளர்களில் சட்ட சபையில் நிறுத்தக்கூடிய யோக்கிதையுள்ளவர்கள் இல்லையென்று சொல்வார்களா? சென்னையிலும், நாகையிலும், கோவையிலும் இத் தலைவர்களின் உபதேசத்தால் வேலைகளைப் போக்கடிக்கப்பட்டு பிழைப்புக்குக்கூட கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் யோக்யமும் அந்தஸ்த்தும் அறிவும் ஆற்றலுமுடைய பல தொழிலாளர்களிருந்துகொண்டு தானிருக்கிறார்கள். அவர்களில் சிலரை ஏன் நிறுத்தக்கூடாது. பஞ்சமர் தீண்டாதவர்என்று சொல்லக்கூடிய கூட்டங்களிலிருந்துகூட நமது சர்க்காரார் சிலரை சட்ட சபைக்கு நியமித்ததின் பலனை அவர்களால் அந்த வகுப்புகளுக்கு இப்போது எவ்வளவு நன்மை ஏற்பட்டிருக்கிறது அல்லாமலும் நிர்வாக மெம்பர் வேலை கொடுத்தாலும் மந்திரி வேலை கொடுத்தாலும் பார்க்கத் தகுந்தவர்களாயிருக்கிறார்கள். அல்லாமலும் இப்பொழுது சட்ட சபையிலிருக்கிற அநேகம் பேரைவிட தேச நலத்திலும் சமூக நலத்திலும் இவர்கள் உழைப்பு உயர்ந்ததென்றே சொல்லலாம். அதுபோலவே நமது தொழிலாளர் கூட்டங்களிலேயும் அநேகர்கள் இருக்கிறார்களென்றே சொல்வோம், மேல் நாடு முதலிய இடங்களிலும் தொழிலாளர்களுக்கென்று தனிக் கட்சியும் தொழிலாளர்கள் பிரதிநிதிகளாக தொழிலாளர்களே இருக்கிறார்களல்லாமல் தொழிலாளர்களுக்காக தொழிலாளர்களல்லாதவர்களும் முதலாளிமார்களும் அரசியல் உத்தியோக ஆசை கொண்டவர்களும் தலைவர்களாகவும் பிரதிநிதிகளாயிருப்பதில்லை. ஆதலால் தொழிலாளர்களும் இது சமயம் கண் விழித்துக்கொண்டு அரசியல் பதவிகளுக்கும் ஸ்தானங்களுக்கும் தங்கள் பிரதிநிதிகளை நிறுத்தும்படி தங்களுக்குத் தலைவர்களென்று சொல்லிக்கொண்டிருப்பவர்களைக் கேட்கவேண்டியது. அவர்கள் சம்மதிக்காவிட்டால் அத்தலைவர்களிடமிருந்து விலகி தாங்களே தங்களுக்குள் ஒருவரை இப்பதவிகளுக்கு தெரிந்தெடுத்து அபேக்ஷகர்களாக நிறுத்தி ஒற்றுமையாய் வேலை செய்து பார்க்கவேண்டியது. இதிலிருந்தாவது தொழிலாளர்களுக்கு தங்கள் நன்மைக்கு உழைக்கிற உண்மைத்தலைவர்கள் யார்? தங்களுடைய சுய நலத்துக்கு தொழிலாளர்களை உபயோகப்படுத்திக்கொள்ள உழைக்கும் போலித் தலைவர்கள் யாரென்று விளங்கும்-ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுவதுபோல் இதுவரையிலும் உங்களை ஏமாற்றி ஓட்டுக்கும் பெருமைக்கும் உங்களை உபயோகப்படுத்திக்கொண்டிருந்த போலித் தலைவர்களை இனியும் நீங்கள் நம்பாதீர்கள். மகாத்மா காந்தியால் உலகம் போலிகளை அறிந்துகொண்டு வருகிறது. நீங்கள்மாத்திரம் ஏன் இன்னும் கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறீர்கள். கண் விழியுங்கள். இது சமயம் ஏமாந்தால் இனி வெகுகாலத்து உங்களுக்கு விமோசனமில்லை. போலிகளை விட்டு விலகுங்கள், விலகுங்கள், விலகுங்கள்.

---

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

ளாக நமது ஜனங்கள் சட்டசபைக்கு போய்க் கொண்டும் வந்துகொண்டும் தானிருக்கிறார்கள் சர்க்காராரிடமிருந்தும் பல சீர் திருத்தங்களையும்பெற்று அதன்மூலமாய் அநேகபதவிகளையும் உத்தியோகங்களையும்அடைந்துமிருக்கிறார்கள். உதாரணமாய் ராஜப்பிரதிநிதி என்கிறஒரு உத்தியோகம் தவிரமற்றபடி கவர்னர் நிர்வாக சபை அங்கத்தினர், மந்திரி, ரெவினியூ போர்டு அங்கத்தினர் முதலிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகங்களும் கலெக்டர் ஜட்ஜி கமிஷனர் முதலிய அதிகாரம் வாய்ந்த உத்தியோகங்களும் இந்தியர்கள் வகித்து வருகிறார்கள். இதுகளினால் ஏழை மக்களுக்கு இதுவரையில் என்ன பலன் கிடைத்திருக்கிறது. சட்டசபை இல்லாத காலத்தில் இருந்ததைவிட சட்டசபை ஏற்பட்ட பிறகு மக்களுக்கு நிம்மதிகள் அதிகமாகவும் சீர்திருத்தங்கள் இல்லாத காலத்திலிருந்ததைவிட ஏழைகளுக்கு வரி அதிகமாகவும் தரித்திரங்கள் அதிகமாகவும் ஏற்பட்டு இருக்கிறதேயல்லாமல் என்ன தேசத்துக்குபலன் ஏற்பட்டிருக்கிறது. ஏழைகளின் பிரதிநிதிகள் என்று சொல்லி ஏழைகளை ஏமாற்றி சட்ட சபைக்குப்போனவர்கள் தங்களுக்கும் தங்கள் பிள்ளை குட்டிகளுக்கும் தங்கள் ஜாதியார்களுக்கும் பல உத்தியோகத்தையும் நிரந்தரமான பதவியையும் சம்பாதித்துக்கொண்டார்கள். இனியும் அதற்காகத்தான் படித்தவர்களும் உயர்ந்த ஜாதியாரென்பவர்களும் ஏழைகளை ஏமாற்றி வருகிறார்கள். ஆகையால் சட்ட சபைப் பயித்தியத்தை மறந்து விடுங்கள் ஏழைகளைக் கவனியுங்கள். காந்தியை நினையுங்கள். ஏழைகள் வாயில் மண்ணைப்போட்டு விட்டு துணியின் மூலமாகவும் மற்றும் அன்னியநாட்டு சாமானக்கள் மூலமாகவும் அந்நியநாட்டுக்கு அனுப்பும்பணத்தை நிறுத்துங்கள். நீங்கள் கட்டியிருக்கும் அந்நியநாட்டுத் துணியின் ஒவ்வொரு இழையும் கிராமத்து ஸ்ரீகளான உங்கள் சகோதரிகளைக் கஞ்சிக்கு அலையவிட்டுவிட்டு அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய கூலியை அந்நியநாட்டுக்குத் கொண்டுபோய்விட்டது. நீங்கள் 15-ரூபாய் போட்டுவாங்கும் 1 பின் மல்துணியில் ஒன்னரைரூபாய் பெறும்படியான பஞ்சுதானிருக்கிறது. பாக்கி ஏழை மக்களுக்குக் கிடைக்கவேண்டிய கூலியாகிய 13-8-0 ரூபாய் அந்நியநாட்டுக்குப் போய் விட்டது. இந்த 13-8-0ரூபாயில்லாமல் நம் நாட்டில் எத்தனை குடும்பம் பட்டினி இருக்கிறதென்பதை நினைத்துப்பாருங்கள். இந்த மல் துணிக்குப் பதிலாய் கதர் துணியை வாங்கிக் கட்டியிருப்பீர்களானால் அவ்வளவு பணமும்ஏழைத்தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்குந்தானே போய்ச்சேர்ந்திருக்கும். உங்களுக்கு ஜீவகாருண்யம் இருக்குமே ஆனால் கதரை வாங்கிக்கட்டாமலிருந்திருப்பீர்களா அன்னதான மென்றாலென்ன பாயாசத்திற்கு பாதாமிப்பருப்பு போதவில்லை என்று சொல்லித்திரியும் சோம்பேரிகளுக்கு சமயல் செய்து போடுவதில்தான் அன்னதானம் என்று நினைக்கிறீர்களே தவிர பசியால் வாடி, தங்களது கற்பையும் மானங்களையும் இழந்து திரியும் சகோதரி சகோதரர்களுக்கு கஞ்சி கிடைக்கும் வழியை கொஞ்சமும் கவனிக்காமலிருக்கிறீர்கள். இனியாவது சட்ட சபைப்பயித்தியத்தையும், படித்தவர்களும் உயர்ந்த ஜாதியாரென்பவர்களும் தங்கள் உத்தியோகத்திற்கும் உயர்ந்ததன்மையை நிலைநிறுத்திக்கொள்வதற்கும் கூலி கொடுத்து ஆள்களைக் கூட்டிக்கொண்டுவந்து உங்களை ஏமாற்றுவதையும் மறந்து மகாத்மா காந்தியையும் ஏழைகளையும் பார்த்து நீங்கள் எல்லோரும் கதர் உடுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுதான் உண்மையான காந்தியமாகும் காந்தி படத்தை வைத்துக்கொண்டு பூஜை செய்வதும் காந்தி பெயரைச் சொல்லிக்கொண்டு சட்டசபைக்குப் போவதும் ஒருக்காலும் காந்தியமாகாது. என்று உங்களுக்கு நான் வணக்கத்துடன் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

என்று பேசிமுடித்தார். பிறகு தீண்டாமை என்பதைப்பற்றிச்சிறிது நேரம் பேசிவிட்டுச் சென்னைக்குப் பிரயாணமானார்.

---

## சுயராஜ்யக்கக்ஷி ஒத்துழையாமை

---

சுயராஜ்யக்கக்ஷித் தலைவரான பண்டித் மோதிலால் நேரு டில்லியில் சட்டசபை விட்டுவந்தவுடன் சட்ட மெம்பர்களுக்கு ஒரு விருந்து நடத்தினார் அதில் அதிகாரவர்கத்தாரை யெல்லாம் அழைத்து மரியாதை செய்தாராம் எதற்காக? சட்டசபையை விட்டு நாங்கள் கோபித்துக் கொண்டு வெளியேரிவிட்டதாய் நினைத்துக் கொள்ளாதீர்கள் ஓட்டர்களை ஏமாற்றுவதற்காக வெளியேறினதாய் சும்மா வெறும் வேஷம் போட்டோம் [illegible] வேறில்லையென்று அதிகாரவர்க்கத்திடம் [illegible] தங்களுக்குபூரணபக்தியும்மரியாதையும் உண்டு என்பதை காட்டுவதற்கு ஆகவே அல்லாமல் வேறில்லை சென்னையில் ஏன் சுயராஜ்ய கக்ஷியார் இப்படி செய்யவில்லை என்றால் இங்கே அதிகாரவர்க்கம் இவர்களை லக்ஷியம் செய்வதில்லை இவர்களையும் கூப்பிடமாட்டார்கள் கூப்பிட்டாலும் வரமாட்டார்கள்

## கும்பகோணம்.

---

ஸ்ரீமந் மௌனானந்தபரம ஸத்குருநாத ஸ்வாமிகள் 27வது குருபூஜை குடந்தைமாநகர் ஷை ஸ்வாமிகள் திருமடாலயத்தில் அக்ஷய௵ சித்திரைமீ 12உ நடைபெறும்.

வெ. மீனாக்ஷியம்மாள்

தர்மகர்த்தா.

## சுயராஜ்யக் கக்ஷியும், மதுவிலக்கும் தென்னாட்டு பிராமண சக்தி.

பிராமணக் கட்சியாகிய சுயராஜ்யக் கட்சி சட்ட சபைகளில் மது விலக்கு செய்யும் ஆதலால் அவர்களுக்கு ஓட்டுக் கொடுங்களென்று இன்னமும் ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் பிரசாரம் செய்துவருவது பொது ஜனங்களுக்குத் தெரியும். ஆனால் மது விலக்குக்கும் சுயராஜ்ய கட்சிக்கும் எவ்வளவு பொருத்தமிருக்கிறது என்பதை ஓட்டர்கள் நினைத்து பார்க்கவேண்டும்.

1. சுயராஜ்யக் கட்சித் தலைவர் பண்டிதர் வட இந்தியாவில் சாராயம் காய்ச்சும் ஒரு பெரிய கம்பெனியில் பங்குக்காரர் என்று கேள்விப்படுகிறோம். அல்லாமலும் மதுவருந்துவது குற்றமல்லவென்று நினைத்து அளவாய்க் குடிக்கும் மேல்நாட்டு நாகரீகத்தில் ஈடு பட்டவர்.

2. சுயராஜ்யக் கட்சி தலைவரை நடத்துகிறவரும் சுயராஜ்யக் கட்சியை தேற்றுவித்தவரும் காங்கிரஸ் காரியதரிசியுமான ஸ்ரீமான் எ. ரங்கசாமி அய்யங்கார் ஒவ்வொரு வீட்டிலும் பிராந்தி என்னும் சாராயம் வைத்திருக்கவேண்டியது அவசியம் என்று விளம்பரம் செய்து சாராயம் விற்கிறவர்.

3. ஸ்ரீ சீனிவாசய்யங்காரைப் பற்றி சொல்லவேண்டியதில்லை.

4. ஸ்ரீ சி. வி. வெங்கட்டரமணய்யங்காரோ தன் தென்னமரத்தில் கள் உர்ப்பத்தி செய்வதில் பணம் சம்பாதிக்கிறவர் அவர் இல்லையென்று சொன்னாலும் சிலருக்கு பணம் கொடுத்து இல்லையென்று எழுதச் சொன்னாலும், பொள்ளாச்சி கான்பரன்சுக்கு போக ஸ்ரீமான்கள் சி. ராஜகோபாலாச்சாரியரும் ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் ரயிலில் பிரயாணம் செய்யும்போது கிணத்துக்கடவு ஸ்டேஷனன்டை வண்டி நின்றதும் ஸ்ரீமான் சி. வி. வெங்கட்டரமணய்யங்கார் தோப்பில் உள்ள மரங்களில் கள்ளு முட்டி கட்டியிருந்ததை ஒருவர் காட்டி நேரில் பார்த்தார்கள்.

இவர்கள் சட்ட சபைகளில் கள்ளை நிறுத்துகிறவர்கள் ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் இவர்களுக்கு பிராமணரல்லாதாரின் ஓட்டுகளைவாங்கிக்கொடுப்பவர் பிராமண சக்தியின் வலிமை என்னே! என்னே!! இவர்கள் கூட்டத்திரியும் ஸ்ரீமான் திரு வி. கல்யாணசுந்திர முதலியாரின் தன்மை என்னே! என்னே!!

## "ஸ்ரீமான் கல்யாணசுந்திர முதலி" யாரின் சுற்றுப் பிரயாணம்.


வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தால் வகுப்புதுவேஷம் உண்டாகிவிடும் என்று பயப்படுவதாய்ச் சொல்லிக்கொண்டு அதற்கெதிர்ப் பிரசாரம் செய்ய பிராமணர்களுடன் சுற்றுப்பிரயாணம் செய்யும் ஸ்ரீமான் திரு வி. கல்யாணசுந்திர முதலியார் அவர்கள் ஆங்காங்கு கண்ட காட்சியைப்பற்றி சொல்லும்போதும் எழுதும்போதும்தான்போனவிடங்களில் வகுப்பு துவேஷங்கள் விளங்கிக்கொண்டிருப்பதாய்ச் சொல்லுகிறார். வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வெகுகாலமாய் இல்லாமலிருந்தும் நாட்டில் ஏன்வகுப்பு துவேஷங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். இம்மாதிரி வகுப்பு துவேஷங்கள் நாட்டில் இருப்பதற்கு காரணம் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஏற்பட்டதினாலா ஏற்படாததினாலா என்பதை நமது ஸ்ரீ முதலியார் அவர்கள் தயவு செய்து பிராமணர்கள் இல்லாத சமயத்தில் தனியே உட்கார்ந்து தனது நெஞ்சில் கையை வைத்து பார்க்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

## டாக்டர் வரதராஜுலுநாயுடுவின் சுற்றுப் பிரயாணம்.

டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள் தனது சுற்றுப் பிரயாணத்தில் நாகபட்டணம் முனிசிபல் உபசாரப் பத்திரத்திற்கு பதிலளிக்கும்போது வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் வேண்டுமென்று பேசினார் அதாவதுபஞ்சமர் முதலிய சிறு பான்மை யோருக்கு தனித்தொகுதி வகுத்து தேர்தல் முறையை அளிக்கவேண்டும்-என்று பேசியிருக்கிறார். (இது 21-3-26 தமிழ் நாடு பத்திரிகையின் 7-வது பக்கம் 23, 24, 25, 26-வது வரிகளில் பிரசுரமாயிருக்கிறது.) நாம் கேழ்க்கும் முதல் வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவம் இதேதான்-இது சமயம் பஞ்சமர்களுக்கு டாக்டர் நாயுடு சொல்லுகிறபடி செய்தால்கூட போதுமானது ஆனாலும் பஞ்சமர் சிருபான்மையோரல்ல என்பதை டாக்டர் நாயுடு அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறோம் பஞ்சமர் என்போர் இந்தியாவில் அய்ந்தாவது வகுப்பார் என்று சொல்வது நிஜமல்லாமலிருந்தாலும் தேச மொத்த ஜனத்தொகையில் 5-ல் ஒன்றுக்கு மேலாயிருக்கிறார்கள். இந்த கணக்கு டாக்டர் நாயுடு அவர்களுக்கு தெரிந்ததுதான் ஜஸ்டிஸ் கட்சியாருடைய வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தின் தத்துவமும் இதுதான். அதாவது தனித்தொகுதி வகுத்துதேர்தல் முறையை அளிக்கவேண்டுமென்றுதான் கேள்க்கிறார்கள். நாமும் அதைத்தான் ஆதரிக்கிறோம் டாக்டர் நாயுடு அவர்கள் சொல்லுவது பஞ்சமருக்கும் சிறுபான்மையோருக்கும்என்கிறார்நாம்சொல்வதும்அதேதான் அதாவது பிராமணர் பிராமணரல்லாதார்பஞ்சமர். எனமூன்று பிரிவுகளாகப்பிரிக்கும்படி கேள்க்கிறோம் டாக்டர் நாயுடு அவர்கள் சொல்வதுபோல் இம் மூன்று பிரிவில் பஞ்சமருக்கும் சிறுபான்மையோராகிய பிராமணருக்கும் தனித் தொகுதி வகுத்து தேர்தல்முறை அளித்துவிட்டால் பாக்கியிருப்பவர்களுக்கு தானாகவே தனித்தொகுதியும் தேர்தல் முறையும் ஏற்பட்டுவிடுகிறது. மற்றபடி கிருஸ்தவர், மகமதியர், ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர் முதலிய வகுப்பார்களுக்கு ஏர்க்கனவே ஏற்பட்டுப் போயிருக்கிறது மற்றபடி எந்த விதத்தில் ஜஸ்டிஸ் கட்சி பிராமணரல்லாதார் கேள்க்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கும் டாக்டர் நாயுடு போன்ற சுயராஜ்யக் கட்சியை ஆதரிக்கும் பிராமணரல்லாதார் கேள்க்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கும் ஸ்ரீமான் . எஸ். ராமநாதன் ஆரியா சக்கரை செட்டியார்தண்டபாணி பிள்ளை ஈ. வெ. இராமசாமி நாக்கர் முதலியோர் போன்ற பிராமணரல்லாதார் கேள்க்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கும் வித்தியாசமிருக்கிறதோ நமக்கு விளங்கவில்லை இதையறிந்தேதான் நாம் பல தடவைகளில் டாக்டர் நாயுடு அவர்கள் தனது அந்தரங்கத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு விரோதியல்லவென்றும் ஏதோ சிற்சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஸ்ரீமான் திரு வி. கல்யாணசுந்திர முதலியார் அவர்களோடு போட்டி போட்டு பிராமணர்களுக்கு நல்லபிள்ளை ஆகவேண்டுமென்கிற சமயங்களில் டாக்டர் நாயுடுவும் முதலியாரைப் போலவே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கூடாது என்று சொல்லவேண்டியதாய் போய்விடுகிறது என்று கருதியே எழுதியிருக்கிறோம். ஆனாலும் ஸ்ரீமான் திரு வி. கல்யாணசுந்திர முதலியார் தான் கொஞ்ச காலத்திற்கு முன் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்டது ஜஸ்டிஸ் கட்சியை ஒடுக்குவதற்கு ஆக என்று இப்போது சொல்வதுபோல் நமது டாக்டரும் நாகபட்டணத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டுமென்றதற்கு ஏதாவது காரணமோ வியாக்கியானமோ சொல்லி மறுபடியும் வேதாளம் முருங்கை மரத்திலேறினாலும் ஏறலாம் ஆதலால் டாக்டர் நாயுடு முதலியோர்கள் சந்தர்ப்பங்களை உத்தேசித்துச் சொல்லும் வியாக்கியானங்களில் கருத்தைச் செலுத்தாமல் அவர்களின் அந்தரங்கத்தை மாத்திரம் தெரிந்துகொள்ளும்படி வேண்டுகிறோம்-

## தென்னாட்டுத் தலைவர்களின் சுற்றுப் பிரயாணத்தின் பெருமை

தென்னாட்டுத் தலைவர்கள் என்று சொல்லப்படுவோர்கள் ஓட்டு வேட்டை யென்னும் சுற்றுப் பிரையாணங்களில் ஆங்காங்கு நடக்கும் திருவிளையாடல்களை பிராமணப் பத்திரிகைகள் மறைத்து விட்டு தங்களுக்கு பெருமை உண்டாகும் படியாக இல்லாத சங்கதிகளையும் நடக்காத கௌரவங்களையும் எழுதி பாமர ஜனங்களை ஏமாற்றிவருகிறது. பிராமணரல்லாத வாரப்பத்திரிகைகள் சிலதும் உண்மைகளை மறைத்துவிடுகிறது. தலைவர்களின் சுற்றுப்பிரயாணங்களின் யோக்கிதையை அறியவேண்டுமானால் திராவிடன் பத்திரிகையை வாங்கிப்படித்தால் உண்மை விளங்கும். சுயராஜ்யக் கட்சியை எதிர்ப்பவர்களுக்கும் பிராமணரல்லாதார் களுக்காக பாடுபடும் பிராமணரல்லாதார் கட்சிக்கும் பிராமணர்களின் யோக்கிதையை தைரியமாய் எடுத்துசொல்லுகிறவர்களுக்கும் யோக்கிதையும் மதிப்பும் இருக்கிறதா என்பதையும் நன்றாய் அறியலாம். தூத்துக்குடியில் நடந்த விஷயங்களும் திருச்சியில் நடந்த விஷயங்களும் தலைவர்களைக் கேட்ட கேள்விகளும் அதற்குத் தலைவர்கள் சொன்ன பதில்களையும் பிராமணப் பத்திரிகைகள் பிரசுரிக்காமல் விட்டுவிட்டிருக்கிறது ஆகையால் அப்பத்திரிகைகளின் பொய் ஆதாரங்களையும் பொய்த் தலை அங்கங்களையும் கண்டு ஏமாந்துபோகாமல் இருக்கும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

# குடி அரசு.

அக்ஷய-ஸு சித்திரை-மீ கூ-உ

## வகுப்புவாரி உரிமை.

—:O:—

வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைப் பற்றி வலியுறுத்த ஆரம்பித்த பிறகு தமிழ் நாடு ராஜீய உலகத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டதோடு வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு அனுகூலமாயிருக்கும் சில தேச பக்தர்களுக்கு காங்கிரசில் செல்வாக்கில்லாமலடிப்பதோடு காங்கிரசையே பிராமண மயமாக்க அவசியம் ஏற்பட்டதும் பிராமணரல்லாதாரில் யாருக்காவது காங்கிரஸ் பெயரைச் சொல்லிக்கொள்ள வேண்டுமானல் அவர்கள் பிராமணர்கள் தயவு பெறவேண்டியிருப்பதால் பிராமணர்களுக்கு பயப்பட்டு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எதிர்க்கவேண்டிய அவசியமேற்பட்டவும் ஏற்பட்டிருப்பது நேயர்களுக்குத் தெரிந்த விஷயமே. வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஒரு நாளும் பிராமணர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். வகுப்புவாரி பிரதிநிதித்துவம் எங்கு ஏற்பட்டும் போகுமோ என்கிற பயத்தால்தான் பிராமணர்கள் சர்க்காரைத் தொங்கிக்கொண்டிருப்பதும் ஒரு சர்க்கார் இவர்களுக்கு விரோதமாயிருந்தால் வேறொரு சர்க்காரை தயார் செய்வதுமாயிருக்கிறார்கள். அதற்கு பயந்துகொண்டுதான் வரும் சர்க்கார்களும் பிராமணர்களுக்கு சுவாதீனமாய்ப்போய்விடுகிறார்கள். நம் நாடு ஏதாவது ஒரு காலத்தில் "இயற்கைக்கு விரோதமாய்" நம் நாட்டார்களாலேயே ஆளப்படுகிறது என்கிற யோக்கியதை அடையுமானல் அது கண்டிப்பாய் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டதால்தான் முடியும் என்று வைரக் கல்லில் எழுதிவைப்போம்.

அது ஏற்படும்வரை இந்தியாவை இந்தியர் ஆக்ஷிபுரிவது என்பதை தூரத் தள்ளி வைத்துவிடவேண்டியதுதான். நமது வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு பிராமணர்கள் மாத்திரம் விரோதிகளல்ல. அன்னிய அரசாங்கத்தாரும் விரோதிகள் என்பதை உணரவேண்டும். ஏனென்றால் எவ்வளவுக்கெவ்வளவு நமக்குள் சண்டையும் சச்சரவும் ஏற்பட்டு ஒற்றுமை குறைவாய் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அன்னிய ஆக்ஷியின் எல்லை நீண்டுகொண்டிருக்கும். நமக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்து நம் எல்லோரையும் உத்தியோகத்திற்கும் பதவிக்கும் சண்டை போட்டுக்கொள்ளாமல் அவரவர்களுக்குள்ளது அவரவர்கள் அடையும்படி செய்து ஒருவனை ஒருவர் தின்னுமல் செய்துவிட்டால் பிறகு எல்லோரும் ஒற்றுமையாய்விடுவார்கள். இதனல் அன்னிய ஆக்ஷிக்கு ஆபத்து. ஆதலால் இந்த தத்துவம் எப்போதும் அன்னிய அரசாங்கத்திற்கு விரோதமானது. பெருங்கூட்டத்தை சிறு கூட்டம் ஆளவேண்டுமானல் சிறு கூட்டத்தார் பெருங் கூட்டத்தை ஒருவருக்கொருவர் பொறாமையும் துவேஷமும் ஏற்படும்படி செய்து பிரித்து வைத்து கலகத்தை உண்டாக்கிவிட்டால் தாராளமாய் ஆளலாம் என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோல் சர்க்காரின் நடவடிக்கை. அதுவே நமது பிராமணர்களின் நடவடிக்கை. இதை நம்மில் பலர் அறிவதில்லை. அறிந்தாலும் எப்படி பிராமணர்களுக்கு நல்ல பிள்ளையாகலாம் என்பதில்தான் அதிக கவலை. ஆங்கில அரசாங்கத்தின் 150-வருஷத்திற்கு மேற்பட்ட ஆக்ஷியின் பலனுய்வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இல்லாததின் பலனுய் பிராமணரல்லாத வகுப்புகள் எவ்வளவு முற்போக்கடைந்திருக்கிறது என்று பார்த்தால் உண்மை பிராமணரல்லாத ரத்தம் ஓடும் மனிதன் துடிக்காமல் இருக்கமாட்டான். நம் தென்னாட்டு அரசாக்ஷியில் பிராமணரல்லாதார் நிலை எப்படி இருக்கிறது பிராமணர்கள் நிலை எப்படி இருக்கிறது என்பது கீழ் கண்ட கணக்குகளினுல் அறிந்துகொள்ளக் கோருகிறோம். நமது அரசாங்கத்தில் 35-ரூபாய்சம்பளத்திற்கு கீழ்ப்பட்ட உத்தியோகங்களில் அதாவது வாசல் கூட்டுவது மேஜை துடைப்பது பங்கா இழுப்பது அதிகாரிகளுக்கு கால் கை அமுக்குவது முதலிய வேலைகளில் பிராமணரல்லாதார் 37125 பெயர்கள் இருக்கிறார்கள் பிராமணர்கள் 1810 பெயர் மாத்திரமே இருக்கிறார்கள் இவர்களும் சம்பளம் குறைவாக இருந்தாலும் தளுக்காய் மேலதிகாரிகளை ஏமாற்றி வேலைகள் பார்க்காமல் அதிகாரம் செலுத்தி வருவார்கள். 35-க்கு மேல்பட்டு 100 ரூபாய்வரை சம்பளம் உள்ள உத்தியோகத்தில் பிராமணரல்லாதார் 7003 பிராமணர்களோ 10934 இந்த இடத்திலேயே நம்மைவிட பிராமணர்கள் 4000 பேர் அதிகமாகிவிட்டார்கள், 100-க்கு மேல்பட்டு சுமார் 250 ரூ. வரை உள்ள உத்தியோகத்தில் பிராமணர் 2679 பேரும் பிராமணரல்லாதார் 1666 பேருமாயிருக்கிறார்கள் இந்த இடத்தில் பிராமணரல்லாதாரைவிட பிராமணர்கள் 1000 பேர் அதிகமாயிருக்கிறார்கள். 250 ரூபாயிக்கு மேல்பட்டு உத்தியோகங்களில் பிராமணர்கள் 594 பிராமணரல்லாதார் 280 பேர்கள் இருக்கிறார்கள் இந்த இடத்தில் ஒன்றுக்கு இரண்டிற்கு மேல் போய் விட்டார்கள் கலெக்டர் உத்தியோகத்தில் 11 உத்தியோகம் இந்தியர்கள் வகிப்பதில் 9 பேர் பிராமணர்கள் இந்த இடத்தில் ஒன்றுக்கு ஐந்தாய் விட்டார்கள். ரிவின்யூபோர்டில் உள்ளஒரு இந்திய மெம்பர் உத்தியோகத்தில் பிராமணர்தான் இருக்கிறார். இந்தியருக்கு கொடுக்கப்பட்ட கைத்தொழில் டைரக்டர் வேலையில் பிராமணரே இருக்கிறார். அரசாங்க காரியதரிசி வேலையில் உள்ள இந்தியரும் பிராமணரே.

200 ஜில்லா முன்சிப்புகளில் 150 பேர் பிராமணர்கள், 61 சப்ஜட்ஜுகளில் 45 பேர் பிராமணர்கள். ஜில்லா ஜட்ஜுகளில் 7பேர் பிராமணர்கள். அதாவது எடுபிடி உத்தியோகங்களில் பிராமணரல்லாதாரும், 100 500, 1000, 2000, 3000 உள்ள உத்தியோகங்களில்பிராமணர்களும் அனுபவிக்கிறார்கள் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டாம் என்று சொல்லும் ஸ்ரீமான் திரு வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களை நாம் ஒரு கேள்வி கேள்க்கின்றோம். அதாவது:—

இவ்வித 1000, 2000, 3000 உள்ள உத்தியோகங்கள் பிராமணரல்லாத இந்துக்கள் என்போராகிய 100-ல் 70 பேருக்கு மேலாக இருக்கும் பிராமணரல்லாதாருக்கு குறைவாயிருப்பதற்கும் 100-ல் 3 பேராயிருக்கும் பிராமணர்களுக்கு ஏகபோகமாயிருப்பதும் யோக்கியதை இல்லாததாலா வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இல்லாததாலா என்று கேள்ப்பதோடு ஸ்ரீமான் முதலியார் கோரும் சுயராஜ்யமோ சீர் திருத்தமோ வரவா பிராமணர்களுக்கு உத்தியோகம் பெருக்கமாகுமா அல்லது ஏழைகளுக்கு வரி குறைந்து தொழிலாளிகளுக்கு தொழில் கிடைக்குமா என்று கேள்க்கிறோம்.

—

## சுயராஜ்யக் கட்சிக்கு நற்சாக்ஷிப் பத்திரம்.

ராஜீய உலகத்திலும் சீர்திருத்த உலகத்திலும் ஸ்ரீமான் சி. விஜயராகவாச்சாரியாரும் சுவாமி சிரத்தானந்தரும் முறையே பேர் போனவர்கள். முதலவர் காங்கிரசுக்கே அக்கிராசனபதியாயிருந்தவர். இரண்டாவதவர் மானிட சமூகத்தின் சம உரிமைக்கு உண்மையாய் பாடுபடுகிறவர். இவர்களிருவரும் சுயராஜ்யக் கக்ஷியைப்பற்றி சொல்லுவதாவது:—

1-வது சி. விஜயராகவாச்சாரியார் "கான்பூர் காங்கிரஸ் தீர்மானம் ஒழுங்கில்லையென்பது என் அபிப்பிராயம். காங்கிரஸ் ஒரு கோவிலுக்கு சமானம். அதை சிலர் மாத்திரம் பிடித்துக்கொண்டு பிறருக்கு அதில் தொழும் பாத்தியதையை தடுக்கக்கூடாது. ஒரு பெரிய சந்நியாசியாகிய மகாத்மா காந்தியை ஏமாற்றி கான்பூரில் அத் தீர்மானத்தை காங்கிரசில் நிறைவேற்றப்பட்டிருக்கிறதென்பதே என் அபிப்பிராயம். காங்கிரஸ் 40 வருஷத்திற்கு முன்னலேற்பட்டது அப்பொழுது சட்டசபை இல்லை. சட்டசபைக்காக காங்கிரஸ் ஏற்படவில்லை."

2-வது ஸ்வாமி சிரத்தானந்தர் "சுயராஜ்யக் கக்ஷியார் சட்ட சபையினின்றும் வெளிவந்ததும் சட்டமறுப்பு ஆரம்பித்திருந்தால் அதை சரியான கக்ஷியென்று சொல்லலாம். பிரயோஜனமில்லையென்று வெளிவந்தபின் மறுபடியும் சட்டசபைக்குப் போகிறோமென்பதை எப்படி நாம் ஒப்புக்கொள்ளமுடியும்?"

## கோயமுத்தூர் ஜில்லாவில் சட்டசபைத் தேர்தல் அபேக்ஷகர்கள்.

கோயமுத்தூர் ஜில்லாவின் சார்பாக சட்டசபைக்கு மகம்மதியரல்லாத தொகுதிக்கு மூன்று ஸ்தானங்கள் உண்டு. அவற்றிற்கு இதுவரை நான்கு கனவான்களின் பெயர்கள் சொல்லப்படுகிறது. அதாவது:—

ஸ்ரீமான்கள் வி.சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர், டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார், சி.வி.வெங்கிட்டரமணய்யங்கார் இவர்களுள் முதல் மூவரும் பிராமணரல்லாதார் பிராமணர்களுக்கிருக்கும் உத்தியோகம், பதவி முதலியவைகளைப்போல் பிராமணரல்லாதாருக்கும் இருக்கவேண்டும் என்கிற வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தையும் தேவஸ்தான மசோதாவையும் ஒப்புக்கொள்ளுகிறவர்கள். ஆனால் முதல் இருவர் பிராமணர்கள் கட்டுரவில் நிற்பவர்கள். மூன்றாவதவர் பிராமணரல்லாதார் சார்பாக நிற்பவர். நான்காவதான ஸ்ரீமான் சி. வி. வெங்கிடரமணய்யங்கார் பிராமணர். வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை எதிர்ப்பவர். முக்கியமாய் தேவஸ்தான மசோதாவை ஒழிப்பதற்காக சட்டசபைக்குப் போகிறவர். பிராமணன் உயர்ந்த ஜாதி, பிராமணரல்லாதார் தாழ்ந்த ஜாதி என்கிற வர்ணாசிரம தர்மத்தை கடைப்பிடித்து ஒழுகுவதுடன் அதை ஆதரிப்பவர்.

மகம்மதியர் தொகுதிக்கு அதாவது கோயமுத்தூர், சேலம், தென்னார்க்காடு ஆகிய மூன்று ஜில்லாக்களுக்குமாக ஒரு ஸ்தானம் உண்டு. அதற்கு நமது ஜில்லாவில் ஈரோடு ஜனாப் கா. அ. ஷேக்தாவூத் சாயபு அவர்கள் பெயர் சொல்லிக் கொள்ளப்படுகிறது. இவர் ஈரோட்டில் ஒரு பெரிய மிராசுதார். ஈரோட்டில் மௌலானாக்கள் மகம்மதலி, ஷவுக்கத்அலி, அபுல்கலாம் அசாத், அக்கிம் அஜ்மல்கான் முதலிய மகம்மதிய தலைவர்கள் தலைமையில் நடந்ததும் தமிழ்நாட்டு மகம்மதிய சமூகத்திற்கே ஒரே பொதுவான சங்கமாயிருப்பதுமான மஜ்லிசுல்உலமா கான்பரன்சுக்கு உபசரணை தலைவராயிருந்தவர்.

இந்தியா சட்டசபைக்கு கோயமுத்தூர், சேலம், வடஆர்க்காடு ஆகிய மூன்று ஜில்லாக்களுக்கு ஒரு பிரதிநிதி உண்டு. அந்த ஸ்தானத்திற்கு கோயமுத்தூரிலிருந்தே இரண்டு கனவான்கள் நிற்கப்போவதாக சொல்லிக்கொள்ளப்படுகிறது. அதாவது:

ஸ்ரீமான்கள் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரும் எம் சம்மந்த முதலியாரும் இவ்விருவர்களும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தையும் தேவஸ்தான மசோதாவையும் ஆதரிப்பவர்கள் சென்னை மாகாணத்திலேயே இந்த ஒரு ஜில்லாவில்தான் பிராமணரல்லாதவர்கள் அபேக்ஷகர்களாக இருக்கிறார்கள், மற்றபடி மேற்கண்டவர்களின் ராஜீய அபிப்பிராயங்களைப் பொருத்தவரை நமக்கு ஒரு சிறிதும் கவலையில்லை. ஏனெனில் ராஜீய சம்மந்தமாய் சட்டசபைகளில் ஒரு காரியமும் செய்யமுடியாது என்பது நமது உறுதியான எண்ணம். மகாத்மாவின் எண்ணமும் இதுவேதான். சுயராஜ்யம் பெறுவோம் என்பது முட்டுக்கட்டை போடுவோம், கள்ளை நிறுத்துவோம் என்பதும் ஓட்டர்களை ஏமாற்ற என்பது அபேக்ஷகர்களுக்கே நன்றாய்த் தெரியும்.

## சர் செட்டியாரும், டாக்டர் அம்மையாரும்.

ஒத்துழையாமையின் போது ஜெயிலுக்கு ஜனங்கள் போய்க்கொண்டிருந்ததை ஒப்புக்கொள்ளாத சர் பி. தியாகராய செட்டியார் ஜெயிலுக்குப்போன ஸ்ரீமான் எஸ். ராமநாதன் அவர்களுக்கு பிரத்தியேகசௌகரியம் செய்துகொடுக்க சம்மதிக்கவில்லையாம். இது குற்றமல்லவென்று கஷ்டப்பட்ட ஸ்ரீமான் எஸ். ராமநாதனே ஒப்புக்கொண்டாலும் மறைந்து வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்த நமது பிராமணர்களுக்கு சர் செட்டியார் பகையாய்விட்டார். அவருடைய கக்ஷி தேசத்துரோக கக்ஷியாய்ப் போய்விட்டது. ஆனால் பஞ்சாப் படுகொலையானபோது ஸ்ரீமதி பெசண்டம்மையார் "ஜாலியன்வாலா பாக்கில் பிரபாதிகளை டையர் சுட்டது சரி. அவர்கள் கல்லுப் போட்டார்கள் அதற்கு டையர் குண்டுபோட்டார் இதிலொன்றும் தப்பில்லை" என்று சொன்னார் அதைப்பற்றி கேள்வியில்லை. அவ நடனும் அந்தம்மாள் கக்ஷியிலும் அநேகப்பெரிய "மதிப்புவாய்ந்த" பிராமணர்கள் சேர்ந்துகொண்டு சபைகூட்டி நடத்தி அட்டகாசத் தருந்த தாளம் போடுகிறார்கள். ஏன்? அந்தம்மாள் பிராமணர்களுக்கு அனுகூலமாயிருந்துகொண்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கூடாது என்கிறார். தனக்குள்ள செல்வாக்கை பிராமணர்களுக்கு உத்தியோகங்கள் வாங்கிக்கொடுப்பதிலும் அதற்கு தக்க நல்ல திட்டம் போடுவதிலும் செலவிடுகிறார். அல்லாமலும் ஜாலியன்வாலா பாக்கில் குண்டுபட்டு இறந்த குழந்தை குட்டிகளும் அவமானப்படுத்தப்பட்ட பெண்களும் ஏறக்குறைய எல்லோரும் பிராமணரல்லாதார்கள் ஆதலால் அந்தம்மாளுக்கு பிராமண அனுசரணை தாராளமாய் இருக்கிறது. அப்படி இல்லாததால் சர். செட்டியாருக்கு பிராமணர்களைத் தவிர பிராமணரல்லாதாரிலும் சில *துரோகிகள் இருக்கிறார்கள். என்னே காலத்தின் கோலம்.

## மகாத்மாவுக்கு பொது ஜனங்களிடம் உள்ள நம்பிக்கை.

கொஞ்ச நாளைக்கு முன்பு ஒரு நூல் சந்தாதார் தன் கைப்பட நூற்று நூற்போர் சங்கத்திற்கு அனுப்பிவரும் நூல்களை தனக்கு திருப்பி அனுப்பினால் அதன் கிரயத்தை கொடுத்துவிடுவதாகவும் அந்த நூலைக்கொண்டு நெய்த துணியை அணிய தான் ஆசைப்படுவதாகவும் எழுதியிருந்தாராம். அதற்கு மகாத்மா பதில் எழுதுகையில் அவரவர்கள் நூலை அவரவர்களுக்கு திருப்பி அனுப்பிவிட்டால் மறுபடியும் அந்த நூலையே சந்தாவுக்கு அனுப்பிவிடுவார்கள் ஆதலால் அந்த நூலை சலவை செய்து அனுப்பக்கூடும் என்று எழுதினாராம் தினம் நூற்று மாதா மாதம் நூல்அனுப்புகிறோமென்று பிரமாணம் செய்து உறுதி மொழியில் கையொப்பமிட்ட நூல் சந்தாதாரரிடமே இவ்வளவு அவநம்பிக்கை இருக்குமானால் மற்றவர்களிடம் எவ்வளவு நம்பிக்கை இருக்கும்? இதிலிருந்து கொஞ்ச காலத்திற்கு முன் மகாத்மாவுக்கு நம் ஆள்களிடம் இருந்த நம்பிக்கைகூட உறுதி மொழி கொடுத்தவர்களிடம் இல்லைப்போலிருக்கிறது. தன்னிடம் இருக்கும் உறுதி ஆட்டம் கொடுத்தவுடன் எல்லாரிடமும் சந்தேகப்படுவது இயற்கைதான்.

## சுயராஜியக் கக்ஷியும், மகமதியரும்.

மகமதியர்கள் பெரும்பான்மையாயுள்ள இந்தியாவின் வட எல்லைப்புற மாகாணங்களுக்கு இந்தியாவின் மற்ற பாகங்களைப்போலாவது சீர் திருத்தங்கள் வழங்கப்படவேண்டும். என்ற ஒரு தீர்மானத்தை இந்தியா சட்டசபையில் ஒருமகமதிய கனவான் பிரேரேபித்தபோது சுயராஜ்யக் கக்ஷியார் அதை எதிர்த்துத் தோற்கடிப்பதற்கு அனுகூலமாயிருந்தார்களாம். சில மகமதிய கனவான்கள் சுயராஜ்யக் கக்ஷித் தலைவரான பண்டித நேருவை எங்கள் விஷயத்தில் ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று கேட்டதற்கு சீர்திருத்தமே போதுமானதல்ல உபயோகப்படக்கூடியதல்ல ஆதலால் அது உங்களுக்கு ஆகாது அதினால்தான் நாங்கள் ஆக்ஷேபித்தோம் என்று பதில் சொன்னாராம். சுயராஜ்யக்கக்ஷி பிராமணருக்கு மாத்திரம் சீர்திருத்தத்தின் பலனாய் ஏற்பட்ட சட்டசபையும் அதில் ஏற்படும் கமிட்டி அங்கத்தினர் பதவியும் 4000, 5000. சம்பள முள்ள சட்டசபை அக்கிராசனம் முதலிய ஸ்தானங்களும் சுயராஜ்யம் பெற உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடியதும் அதற்குப் போதுமானதுமாயிருக்கிறது. ஆனால் எல்லைப்புற மகமதியர்களுக்கு மாத்திரம் பிரயோஜனமில்லையாம். போறுதாம். இது சிறு குழந்தைகள் ஏதாவது கேட்டால் தொடாதே கடித்துவிடும் என்று சொல்லுவதுபோலிருக்கிறது. இம்மாதிரி சுயராஜ்யக் கக்ஷியில் எப்படித்தான் உண்மையான மகமதியர்கள் சேருகிறார்களோ தெரியவில்லை. ஆனாலும் இரண்டொரு ஆசாமிகளைத்தவிர பெரும்பாலும் புத்தியுள்ள மகமதியர்களெல்லாம் சுயராஜ்யக்கக்ஷியினின்றும் விலகிவிட்டார்களென்றே சொல்லலாம். அந்த இரண்டொருவர்களைப் பற்றிக்கூட நாம் ஆச்சரியப்படக் காரணமில்லை. ஏனென்றால் பிராமணரல்லாதாரிலேயே பிராமணர்களின் சூழ்ச்சி அறிந்த சிலர் தங்களை அறிவாளிகளென்று சொல்லிக் கொண்டு பிராமணர்களின் வாலைப் பிடித்துக்கொண்டு திரிவார்களேயானால் மகமதியரைப்பற்றி நாம் ஆச்சரியப்பட என்ன நியாயமிருக்கிறது.

### சுகோதயம்.

கொஞ்சகாலமாக நிறுத்தப்பட்டிருந்த ஆரணி சுகோதயம் என்ற வாரப்பத்திரிகை சித்திரை மீ 14-உ முதல் வெளிவரப்போவதாக அதன் ஆசிரியர் ஸ்ரீமான் வி. என் அரங்கசாமி அய்யங்கார் அவர்கள் மூலமாகக் கேழ்க்க மிகவும் சந்தோஷமடைகிறோம்.

# போலீஸ் நிர்வாகம்.

கொஞ்சகாலமாக போலீசு நிர்வாகம் வெகு தடபுடலாக இருந்து வருவதாகவே சொல்லலாம். வீதிகளில் முக்கு முக்குக்கு போலீசாரை நிருத்தி வண்டிகளையும் மோட்டார்களையும் இடம் வலம் பிரித்து அனுப்புவது வெகு மும்மரமாயிருக்கிறது இது ஒரு விதத்தில் நன்மை ஆனாலும் 15 அடி 20 அடி உள்ள குருகிய ரோட்டுகளில் கூட போலீசார் நடுவில் நின்று கொண்டு வண்டிகளை இடம் வலம் பிரிப்பது வேடிக்கையாயிருக்கிறது. ஒவ்வொரு சமயங்களில் போலீசார் பாடு உயிருக்கே ஆபத்தாய் விடும் போலிருக்கிறது சிற்சில போலீசார் தங்கள் மேல் வண்டி ஏறட்டுமென்றே உறுதியாய் விலகாமல் நிற்கிறார்கள். அதுசமயங்களில் வண்டிக்காரர்கள் பாடு வெகு கஷ்டமாய் போய்விடுகிறது. அல்லாமல் இந்த கொடுமையான வெய்யலில் போலீசுகாரர்கள் அசையாமல் நின்று கொண்டிருப்பதானது போலீசாருக்கு பெரிய தண்டனை என்றுதான் சொல்ல வேண்டும். பார்க்கிரவர்கள் கண்ணுக்கு இந்த போலீசார்களின் நிலை மிகப்பரிதாபமாகவே காணப்படுகிறதும் தவிர மாதம் 20 25 ரூபாய் சம்பளமும் லீவு பென்ஷன் உடுப்பு வகைராக்களுக்கு, குறைந்தது மாதம் 10-ரூபாய் சிலவுகளும் ஆக மாதம் 35 ரூ. சம்பளம் கொடுக்கும் ஆள்களை நடுரோட்டில் வெய்யிலில் கைகாட்டி மரம்போல் நிருத்தி வண்டிகளை இடது புரம் விடு வலது புரம் விடு என்பதற்குத்தானா உபயோகப்படுத்த வேண்டும். இந்த ஆளுகளுக்கு எஜமானர்களாய் இருக்க 100, 200, 500 சம்பளமுள்ள உத்தியோகஸ்தர்கள் வேண்டுமா? இவற்றை கவனிக்க சட்டசபை மெம்பர்கள் இல்லை. எந்த உத்தியோகமானாலும் எங்கள் ஜாதிக்கு கொடு என்பதற்கு மாத்திரம் சட்டசபையில் மெம்பர்களுக்கு குறைவில்லை வண்டி விலக்கி இடம் வலம் விடுவதற்கென்று ஒரு இலாக்கா வைத்து அவற்றிற்கு மாதம் 12 அல்லது 15-ரூ கொடுத்தால் 1000க்கணக்கான ஆள்கள் கிடைக்கும் அதை விட்டு விட்டு 10௵ 15, 20௵ அனுபோகம் பெற்ற 20, 25, ரூபாய் ஆளுகளைக் கொண்டு இந்த வேலை வாங்குவது ஸாது ஜனங்களின் வரிப்பணம் கேழ்ப்பாரற்று சிலவாகிறது என்பதைத்தவிர வேறு என்ன சொல்லலாம்.

அல்லாமலும் போலீசாரெல்லாம் பிராமணரல்லாதாராய்ப்போய்; விட்டபடியாலும் மேலதிகாரிகள் எல்லாம் பிராமணராய் அமைந்து விட்டதாலும் போலிஸ் கானிஸ்டேபிள்கள் நாயிலும் கடையாய் நடத்தப்படுகிறார்கள் அவர்களை மேலதிகாரிகள் பேசும் வார்த்தைகளோ சில சேரியில் பேசிக்கொள்வது போல் அடே போடா வாடா என்பதோடு நாய் கழுதை எருமை இதுகளுக்கு பிரந்தவன் என்று பேசுவதோடல்லாமல் பெண்டு பிள்ளைகளும் சில சமயங்களில் தடுமாறிப்போகிறதாம். வெள்ளைக்கார அதிகாரிகள் இவற்றை கொஞ்சமும் கவனிப்பதில்லை போலீசிலாக்காவில் போலீசாரை மனிதர்களாக பாவிக்க வேண்டுமென்றால் குறைந்தது ஒவ்வொரு இடங்களிலும் சர்க்கிள் இன்ஸ்பெக்டரோ அல்லது சப் இனிஸ்பெக்டரோ யாராவது ஒருவர் பிராமணரல்லாதாராயிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். அப்படிக்கில்லாமல் சிற்சில சமயங்களில் டிப்டிசூப்ரெண்ட் சர்க்கிள் இனிஸ்பெக்டர் சப் இனிஸ்பெக்டர் எட்கான்ஸ்டேபிள் ரைட்டர் ஆகிய எல்லோரும் பிராமணர்களாய் அமைந்து விடுகிறார்கள். இம்மாதிரி சமயங்களில் பிராமணரல்லாத போலீஸ் கான்ஸ்டேபிள்கள் பாடு நரக வேதனைதான் ரைட்டர் முதல் ஒவ்வொரு பிராமண உத்தியோகஸ்தருக்கும் இரண்டுஇரண்டு ஆள்கள் வீட்டு வேலைக்கு வேண்டியிருக்கிறது போகாவிட்டால் பிரமோஷன் இல்லை கஷ்டமான டூட்டி கொடுத்து அவர்களை கொடுமை செய்வது அல்லாமலும் வரும்படிவரக்கூடிய பிராதுகள் ஏதாவது வந்தால் அதுகளை பங்கிட்டு நிரவி இவர்களுக்கும் கொடுக்காமல் பிராமண போலீஸ் கான்ஸ்டேபிள் எட்கான்ஸ்டேபிள் இவர்களுக்குள்ளாகவே சரி செய்து கொள்வது இன்னம் இதில் எழுதக்கூடாத எவ்வளவோ கொடுமைகள் பிராமணரல்லாத கான்ஸ்டேபிள்கள் அனுபவிக்க நேரிடுகிறது. பிராமணரல்லாதாரிலேயே சிலர் பிராமணர்களுக்குள் நுழைந்து கொண்டு இவ்வித காரியங்களுக்கும் உடந்தையாயிருப்பதால் பிராமணரல்லாதாரின் நிலை இப்படி இருக்கவேண்டியிருக்கிறது. இந்த கஷ்டங்கள் என்று தொலையுமோ நமக்குதெரியவில்லை.

ரோஜா முத்தையா

# சமாதானமும் வந்தனமும்.

நமது குடி அரசு இரண்டு வாரம் நிருத்தப்பட்டதைப்பற்றி அநேக ஆவலாதிகள் வந்தன. அவற்றில் ஒன்று இன்று யார் முகத்தில் முழித்தேனோ குடி அரசு வரவில்லையென்றும் மற்றொன்று குடி அரசு வராததால் இன்று முழுதும் சாப்பிட மனமில்லையென்றும் மற்றொன்று குடி அரசை ஒழுங்காய் அனுப்புவதானால் அனுப்புங்கள் இல்லாவிட்டால் நிறுத்திவிட்டு என் பணத்தை திருப்பி அனுப்புங்கள் பத்திரிகை திங்கட்கிழமை தபால் நேரத்திற்குக்கிடைக்காவிட்டால் மனம் வருத்தப்படும் என்றும் ஒரு மகமதிய கனவான் மற்றொன்று இந்த ஒரு பத்திரிகையை ஒழுங்காய் நடத்த முடியாவிட்டால் எப்படி உங்களை பிராமண ரல்லாதார் பின் பற்ற முடியும் இது ஒன்றுதான் உள்ள நிலைமையை எழுதுவதால் அது கிடைக்காவிட்டால் மனது அவ்வளவு வருத்தப்படுகிறது என்றும் மற்றொருவர் திராவிடர்களுக்கு ஆசையிருக்கிறதே தவிர பிராமணர்கள் போல் காரியம் நடத்தத்தக்க சக்தியில்லை வீணாய் அவர்களுடன் போட்டி போட்டு என்ன செய்வது இந்த ஒரு சிறிய பத்திரிகையை சரியாய் நடத்தத் தங்களால் ஆகவில்லையே வெறும் வாய்ப்பேச்சில் என்ன பலன் என்றும் இன்னும் பலவிதமாகப் பலர்எழுதியிருக்கிறார்கள். இந்தக்குற்றங்களை அன்போடு ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால் நான் ஒருவன் ராஜீய உலகத்தில் எனக்கு சகாயம் செய்ய யாரும் தைரியமாய்வர பயப்படுகிறார்கள். வருவதானால் சர்க்கார் பயம் பிராமணர்கள் பயம் இவ்விருவரின் இடைஞ்சல்கள் இவைகளுக்குத் தயாராயிருக்க வேண்டும் தபால் தகரார் ரயில்வே தகரார் அல்லாமலும் நானே பத்திரிகை முழுதும் எழுத வேண்டும் இவ்வளவும் இருப்பதோடு பண நஷ்டம் ஒருபுரம் அடைந்து வர வேண்டியிருக்கிறது. அல்லாமலும் வாரம் ஒரு தடவை வெளியூர்களுக்கு பிரசாரத்திற்கும் போகவேண்டும். ஒருநாள் பிரசாரத்திற்கு 3நாள் மெனக்கேடு அதாவது போக வர 2 நாள் பிரசாரம் ஒரு நாள் இவ்வளவு கஷ்டமும் பண நஷ்டமும் ஏற்படுவதைக் கவனியாமல் ஆவலாதிகள் மாத்திரம் ஏற்பட்டால் என்ன செய்யக்கூடும் இந்தத்தடவை கூட சொந்த அச்சுக்கூடம் ஏற்படுத்த முடியவில்லை. கோயமுத்தூரிலுள்ள ஸ்டார் பிரஸ் லிமிடெட் கம்பெனியார் தங்களிடம் மீதியாய் ஒரு டிரடிலும் ஒரு டிம்மி பிரசும் ரிப்பேர் செய்து ஈரோட்டில் ஒரு பிராஞ்சு ஏற்படுத்துவதாயும் அதற்கு வேண்டிய எழுத்துக்கள் முதலியவைகளில் தங்களுக்குப் போதுமானது போக பாக்கிக்கு மகா- ஸ்ரீ சா. ராமசாமிநாயக்கர் போட்டுக்கொண்டு அந்தத் தொகையை ஷேராக எடுத்துக்கொள்வதென்றும் முன் நாம் இங்கு கொடுத்த கூலியாகிய பாரம் 1-க்கு 4 ரூபாய் வீதம் கூலி போட்டு பத்திரிகையை ஸ்ரீமான் சா. ராமசாமி நாயக்கரைக்கொண்டே பத்திரிகை நடத்திக் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டதால் அந்தப்படி ஏற்பாடு செய்து இவ்வாரம் பத்திரிகை தொடங்கியிருக்கிறது. இன்னமும் சாமான்கள் சரியாய் வந்து சேரவில்லை ஆனாலும் 2 வாரத்தில் பத்திரிகை அனுப்புவதாய் சொன்னபடிக்கு அவசரத்தில் உள்ள சாமான்களைக்கொண்டு ஏதோ ஒரு விதத்தில் இந்த வாரத்தில் வெளியாக்கிவிட்டோம். எல்லா சாமானும் காலத்தில் வருமென்று நினைத்து இவ்வாரம் 16 பக்கம் நெம்பர் போட்டு அச்சேரிய பின்பு சாமான்கள் வாராததால் வழக்கம் போல் 12 பக்கமாகவே பத்திரிகை போடப்பட்டிருக்கிறது. ஈரோட்டில் பிராஞ்சு வைத்த ஸ்டார் பிரஸ் லிமிடெட் கம்பெனியார் லாபத்திற்கு வைத்திருந்த போதிலும் அதில் பங்கெடுத்துக்கொண்டு நமக்கு சரியாய்ப் பத்திரிகை நடத்திக் கொடுப்பதாய் முன் வந்ததின் மேனேஜிங் டைரெக்டர் எனது மைத்துனர் ஸ்ரீமான் சா. ராமசாமி நாயக்கரவர்களுக்கும் நமது சார்பாகவும் குடி அரசு சந்தாதாரர்கள் சார்பாகவும் வந்தனமளிக்கின்றோம்.

# சுயராஜ்யக்கக்ஷியாரின் வெளியேற்றத்தின் பரிசுத்தம்.

இந்தியா சட்ட சபையை விட்டு சுயராஜ்யக் கக்ஷி மெம்பர்கள் எல்லாம் வெளியேறினார்கள் என்றால் ஸ்ரீமான் வி. ஜே. படேல் மாத்திரம் ஏன் வெளியேறவில்லையென்றால் மற்ற மெம்பர்களுக்கு அக்கும் இல்லை பிக்கும் இல்லை நமது படேலுக்கு மாதம் 4000 ரூபாய் சம்பளம் உண்டு இப்படிப்பட்டவர் வெறும் ஆசாமிகளோடு சேர்ந்து வெளியில் வந்து விட முடியுமா வந்தால் 4000 ரூபாய் போய்விடும் ஆதலால்தான் சுயராஜ்யக் கக்ஷியின் கட்டுப்பாட்டிலேயே இவரை கொஞ்சம் தளர்த்தி விடப்பட்டிருக்கிறது இல்லாவிட்டால் அடியோடு சட்ட சபையிலிருந்து வெளியேறுவதற்கு பதிலாய் சுயராஜ்யக்கக்ஷியிலிருந்து வெளியேறி விடுவார்.

## வந்தேமாதரம்.

## காந்தியன்றிக் கதிமோட்சம் இல்லை.

என தாருயிர்த் தமிழ் சகோதர சகோதரிகளே! நம் மாபெருமன்னையாம் பாரதத்தாயின் விடுதலையின் மாட்டுழைத்த பலருள் பெரியாரும் இவ்வுலக மெட்டிசையும் ஒவ்வோர் மதஸ்தரும் தம் தம்மதகுருவெனப் போற்றப்படுபவரும் சபர்மதிச் சாதுவாம் காந்தியடிகளே தலைசிறந்தாரென்பது வெள்ளிடைமலை. அம்முனீஸ்பரர் தலைமை ஏற்று நந்தாயின் விடுதலைப்போர் நடாத்திய கடந்த 1921- ஆண்டின் சுதந்தர எழுச்சியையும் இப்போதிய வீழ்ச்சியையும் அப்போதைய ஒற்றுமையையும் இப்போதைய வேற்றுமையையும் சிந்திக்கும் எவர்தான் கண்ணீர் சொட்டாதிருப்பர்? எதோகாலத்தின் கோலத்தால் நமதய்யன் காந்தியடிகள் ஓராண்டு காராக்கிரஹம் வதியநேர்ந்ததும் இதுதான் தக்கசமயமென கண்ணுங்கருத்துமாய் அலைந்த தாந்தோன்றி தம்பிரான்கள் புஷ்பமாலை புனைவதில் பிரியங்கொண்டார் மோட்டார் ரதபவனிப்பிரியர்கள் ஒத்துழையாமைக்காலத்தில் ஓடி ஒழித்த உல்லாசப் பார்ப்பனர்கள், வகுத்தார்கள் ஸ்வராஜ்ய கட்சி என்னும் சுயநலக்கட்சியை. வைதார்கள் காந்தியடிகளை. புகுந்தனர் பாழும் சட்டசபை, ஈராண்டுக்குமேல் இந்திரனுமனுபவித்திரியா இணையற்ற போகங்களைதமது நெருமந்த காதலிகளோடு அனுபவித்துவிட்டு சட்டசபைகலையப்போகும் இறுதியில் வாக்குச் சம்பாதிப்பதற்கென சூழ்ச்சி கோலினர். சட்டசபையைவிட்டு வெளியில் வாலுற்றோம் என்ற வேஷந்தரித்துக்கொண்டனர். ஊர்ஊராய்ச் சுற்றுகின்றனர். எங்கு செல்லினும் ஓட், ஓட் என்று பிதற்றுதலின்றி பிறிதெதுவும் பேசக்காணோம். இப்பார்ப்பனப் புலிகளுக்கு துணையாய் நந்தமிழ் நாட்டில் காந்தியடிகளின் பிரியசிஷ்யரென புகழ்படைத்த ஸ்ரீமான் திரு.வி. கல்யாண சுந்தர முதலியாரையும் செல்லாக்காசு செட்டியார் போன்ற சில சில்லரைத்தெய்வங்களையும் தம்மது பாதம் வருடித்திரிய ஆட்டிவைக்கின்றனர். அய்யங்கார் ஓட் என தம் திருவாய் திறக்குமுன்பே, நச்சினார்க்கினியம், முதலியார் (அல்ல அல்ல) அய்யங்காருக்கும் அவர் தம் திருக்கோஷ்டிக்கும் உங்கள் வாக்கை கொடுங்கள் என செந்தமிழில் இனிய வாக்கியங்களை ஜோடித்து சொற்பொழிவு நிகழ்த்துகின்றார். இம்முதலியார் பெருமான்தான் காந்தியடிகள் செப்பனிட்டு வைத்திருந்த ஸ்வராஜ்ய ஸ்தாபனத்தை உடைத்தெரிய, கங்கணங்கட்டிக்கொண்டு சட்டசபை செல்வோமென சில சுயநலப்புலிகள் விறிட்ட நாளன்று சபையைக்கட்டி அழுவோர் அழுக உண்மையாளர், காந்தியடிகளின் தெய்வீகவழி நிற்போர் டாம்பீகக்குழுவினர் மத்தியினின்று தனித்து காந்தி சங்கமொன்று கண்டு அதின்வாயிலாய் காந்தியடிகளின் தெய்வீக இயற்கை வளர்ச்சிக்கு தொண்டாற்றுங்கள். என எழுதியும் பேசியும் வந்த பிரபு. இன்று காந்தியடிகள் என உச்சரிப்பதும் எட்டி என ஒதுக்கினர்போலும்! எக்கூட்டத்தில் பேசினாலும் ஓட்டோட்டென விருதுகின்றாரன்றி நம்நாட்டின் பிணியைத் துலைக்க வல்ல கதர் தீண்டாமை விலக்குப் போன்ற உயர் அறிய காந்தியடிகளின் தெய்வீகக்கொள்கைகளைப்பற்றி ஒரு சிறிதும் பேசுகிறாரில்லை. முதலியார் நந்தமிழர்களையும் தமிழர்களின் முற்போக்கிற்கென உடல், பொருள் ஆவி, மூன்றையும் தத்தமிட்டுழைக்கும். ஈரோடு ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரையும் வைத்தியர், வாதராஜுலு நாயுடுவையும் வசை மொழிகளில் அலங்கரிக்கும் அய்யங்கார் அய்யர் கோஷ்டிக்கு அடிமையானது ஆச்சரியப்படத்தக்கதல்ல. என்செய்வார். மேலும் அய்யங்கார் திருக்கோஷ்டிகள் தம் பணச்செருக்கால் போலிக் காங்கிரஸ் வாதிகளை கட்டுப்படுத்தி தம் வருகைக்கென ஆர்ப்பாட்டங்கள் பல அமைக்கச்செய்து ரோஜா புஷ்ப ஹாரங்கள் தங்கள் திருக்கழுத்திலிலங்க புதுமணமக்கள் போன்று பவனிவருவதையும், நம் நாட்டின் இத்தகைய இழிதன்மைக்கு காரணராயுள்ள தம் வகுப்பினரால் நடத்தப்படும் காப்பி ஓட்டல் என்ற மாபெரும் மதுபானக் கடைகளாம் காப்பிகஷாய மதுக்கடைகளை அய்யங்கார் சென்று ஆடம்பரமாய் திறந்து ஆசி கூறுவதையும் இன்னும் பல ஆடம்பரங்களையுங்கண்ட டாம்பீக நகராம் சென்னையில் வதியும் முதலியார் அவர்கள் அய்யங்காரின் திருக்கோஷ்டிக்கு அடிமையாகாது தப்புவதெங்கனம். கனம் முதலியாரவர்கள் தம் சுற்றுப்பிரயாணத்தில் நந்தமிழர் ஒவ்வொருவரும் பழய முதலியார் அல்ல பார்ப்பனமுதலியார் என்பதைக்கண்டுகொண்டனர். என்பதுமட்டும் உள்ளங்கை நெல்லிக்கனி என தெளிவுபடுத்திக்கொள்வார் என்பது திண்ணம். முதலியார் அவர்கள் எவ்வழிச்செல்லினும் செல்க. பழய நவசக்தி ஆசிரிய முதலியார் ஆகும் வரையும் உண்மைத் தமிழர் ஒவ்வொருவரும் முதலியாரைப்பற்றி சிந்தியாதிருப்பாராக.

எந்தமிழ்த்தாயின் உண்மைப் புதல்வர்களே! மேலே குறிப்பிட்ட அய்யங்கார் கோஷ்டிகள்தான் இன்று நம்விடுதலைக்கென உழைப்பவர்போல் நம்மத்தியில் நடித்து நந்தமிழர்களை ஏமாற்றி வரப்போகும் தேர்தலில் தம்மினத்தவரை பெருமிதமாய் நிறுத்தி சட்டசபை புகுந்து நம் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுச் செலுத்தும் வரிப்பணத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான பணங்களை படியாகப்பெற்று இந்திரபோகம் அனுபவிப்பதோடு நம் சகாயத்தால் சட்டசபை புகுந்ததை மறந்து நந்தமிழர்களை சூத்திரர்கள் வேசிமக்கள் தீண்டாமை சாஸ்திர சம்மதமானது இவ்வுலகுள்ளவரை நிலவல் வேண்டுமென பிதற்றி நந்தமிழர்களை இழிவு படுத்துவதற்கின்றி மற்றெதுவேனும் நம்நலம் நாடியல்ல என்பதை திரிகரண சுத்தியாய்ச்சாற்றுகின்றேன். இதற்கு திருஷ்டாந்திரம் இந்தியர் சட்டசபை அங்கத்தினராம் நந்தமிழ்நாட்டு எம். கே. ஆச்சாரி என்றவரையும் அதே சபை அங்கத்தினர் வட இந்தியாகிழப் பார்ப்பனர் மாளவியா போன்றவர்களின் சூழ்ச்சிகள் பகருந்தன்மையது அன்று. ஆதலால் இம்மட்டுடன் நிறுத்திக்கொள்கிறேன்.

பெரியார்களே நாட்டின் எல்லோருமுள் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி தோலும் எலும்புமாய் நடைப்பிணங்கள் போன்றுலவித்திரியும் ஏழைமக்களின் சுபிட்சை வாழ்க்கைக்கென காந்தியடிகளால் புதுயிர் அழிக்கப்பட்ட ராட்டினம் கதர் தீண்டாமை விலக்குபோன்ற செப்பரிய கொள்கைகளை அன்றோ பரப்பி மக்களைத் தூய்மைப்படுத்துவோர். இஃதின்றி தேசபக்தர்களை நாடுகடத்தவும் உண்ணும் உப்பிற்கு தாங்க முடியாத வரி ஸ்தாபிப்பதற்கும் இன்னும் நாட்டைக்கெடுக்கவல்ல பலகொடிய சட்டங்கள் இயற்ற நம்மை அடிமைப்படுத்தும் சட்டசபை எனும் மாயஸ்தலம் செல்வோர் எவ்வாறு தேசபக்தராவார் என்பதை மனதிலிருத்தி எல்லாம் சுயகாரியப் புலிகளும் ஜாதிச் செருக்குப்படைத்த பார்ப்பனரின் சூழ்ச்சி என்பதையும் ஊய்த்துணர்ந்து கொள்ளுங்கள். தேசமகாசபையை நங்காந்திஎம்பெருமான் கைப்பற்றிநடத்துமந்நாள் வரும்வரையும் நாட்டுக்கு ஒரு சிறிது கதிமோக்ஷமும் ஏற்படப் போவதில்லை. ஆதலால் எம் பெரியார்களே! அப்பெரியார் பொருப்பேற்கும் சுபதினத்தை விரைவில் கொடுத்தருள எல்லாம்வல்ல நம்பாரதத்தாயைநோக்கி தவங்கிடப்பதோடு அந்நாள் வரையும் சட்டசபை என்னும் மாயஸ்தலத்தை உன்னி மதிமோசம் போகாமல் கதர் ராட்டினம் தீண்டாமை விலக்குபோன்ற உயரிய கொள்கைகளைப்பரப்பி மக்களைவரையும் தூய்மைப்படுத்த தங்கள் அடிபணிந்து வேண்டுகிறேன் எல்லாம் வல்ல நமதன்னை பாரதத்தாய்கிருபை பாலிப்பாளாக. (பெருமாள்.)

நாத்துக்கோடி.

## திருமங்கலம் கதர் ஸ்டோர்.

திருமங்கலம் கதர் ஸ்டோரில் கிராமத்திலிருந்து ஏழைக் குடியானவர்கள் நூற்றுக்கொண்டுவரும் நூலை திருமங்கலத்திலுள்ள கதர் டிப்போக்காரர்கள் சரியான விலை கொடுத்து வாங்குவதில்லையென்றும் ரம்பவும் குறைந்த விலைக்குக் கேட்கிறார்களென்றும் காலாகாலங்களில் கடை திறவாததால் கிராமங்களிலிருந்து நூல் கொண்டுவருகிறவர்கள் அதிக கஷ்டப்பட நேரிடுகிறதென்றும் இதை கதர் போர்டார் கவனிக்கவேண்டுமென்றும் குண்டத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ஒரு குடியானவர் நமக்கு ஆவலாதி எழுதியிருக்கிறார். கதர் போர்டுக்கும் திருமங்கலம் கதர் டிப்போவுக்கும் ஒருவித நிர்வாக சம்மந்தமுமில்லையென்று நாம் நினைப்பதால் இதைப்பற்றி நாம் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனாலும் அந்தக்கடிதத்தைக் கதர் போர்டுக்கு அனுப்பியிருக்கிறோம்.

## மதிப்புரை.

மதுரை ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் அக்ஷய வருஷவாக்கிய பஞ்சாங்கம் ஒன்று நமது பார்வைக்கு வந்தது. இது பஞ்சாங்கம் அறுபத்தொரு வருடப்பஞ்சாங்கம், சோதிடப்பேரகராதி முதலிய சோதிட நூலாசிரியரும் புத்தகசாலையினருமாகிய ஸ்ரீமான் எஸ். கூடலிங்கம் பிள்ளையவர்களால் கணிக்கப்பெற்றது. தேதி நக்ஷத்திரம் திதிவாரம் முதலியன எல்லோரும் சுலபமாய் அறியலாம். இதன் விலை அணா [illegible]

## பெருந்துறை உபாத்திமைச்சங்க ஆண்டுவிழா.

20—3—26.

இச்சங்க ஆண்டுவிழா கோயமுத்தூர் ராவ் சாஹிப் ஸ்ரீமான் ஸி. எஸ். ரத்தின சபாபதிமுதலியாரவர்கள் தலைமையின் கீழ் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கூட்டம் ஏராளமாக வந்திருந்தது. தலைவரவர்களை சகல மேள வாத்தியத்துடன் போர்டு மிடில் ஸ்கூலுக்கு அழைத்துவரப்பட்டது, தேவாரபாராயணம் நடந்தும் தலைவருக்கு ஸ்ரீமான் முத்துரங்கசாமி நாயுடு அவர்கள் வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுத்தார் முதலியாரவர்கள் தமது முன்னுரைப் பிரசங்கத்தை இனிமையாகவும் சுருக்கமாகவும் பேசிமுடித்தார். ஸ்ரீமான்கள் ஸி. என். கிருஷ்ணசாமி அய்யர் சேலம் தமிழ் பண்டிதர் ஸ்கூல் சூப்ரவைசர் ஆகியவர்கள் பிரசங்கம் புரிந்தனர். அதன்பின் சிற்றுண்டி வழங்கப்பட்டதும் பந்தைய விளையாட்டுகள் நடந்தன. தலைவரவர்கள் பிள்ளைகளுக்குப் பரிசு கொடுத்தார். எலிமெண்டரி பாடசாலையை சீக்கிரம் கட்டிக்கொடுக்க தலைவரவர்களை ஜனங்கள் கேட்டுக்கொண்டனர். தலைவர் உதவிசெய்வதாக வாக்களித்தார்; வந்த னுபசாரம் நடந்தது தலைவரவர்களுக்கும் வந்திருந்த அதிகாரிகளுக்கும் பூமாலை போடப்பட்டது. சந்தோஷ ஆரவாரத்தினிடையே கூட்டம் இரவு 9-மணிக்குக் கலைந்தது. தலைவர் அன்றிரவே மோட்டாரில் காங்கயம் சென்றார்.

உ

கோயமுத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்டு மகா-௱-௱ஸ்ரீ ராவ் சாகேப்

C. S. ரத்தினசபாபதி முதலியார் அவர்களுக்கு.

பெருந்துறை ரேஞ்ஜ் உபாத்திமைச் சங்க வருஷாந்திர கூட்டத்தில் ஷ சங்கத்தாரால் வாசித்துக்கொடுத்த

## வரவேற்புப் பத்திரம்.

கோவைமா நகர்க்குண நலமணியே! மேவியின் நகர்க்கு, வருக, வருக.

பெருந்துறை யென்னும் பொருந்துமின் நகருக்கு அரும்பெரும் தலைவா அன்புடன் வருக.

விரும்பும் உங்கள் வரவு நல்வரவாகுக. உபாத்திமைச் சங்க வருஷ உற்சவத்தின் அமைச்சர்கள் சார்பாய் அன்புடன் தங்களை வந்தனத்துடன் வரவேற்கின்றேன்.

உழுவலன்புடைய உத்தமப் பெரியீர்!

இமைப்பொழுதேனும், இடைவிடாருந்து பொதுநலம் புரியல், பொருப்புக்கிடையில், ஆசிரியர் குழாத்திற், கலைத்தலைமை வகிக்கவும், பள்ளிப் பாலகருக்குப் பரிசு கொடுக்கவும், எங்கள் வேண்டுகோளை இனிது பொருட்படுத்தித் தங்கள் சிரமத்தை யோர், தடையென்றெண்ணாது, இங்கு தாங்கள் எழுந்தருளியது என்றுமில்லாத எங்கள் பாக்கியமே.

பிறர்க்குதவிசெய்யும் பேரறிவாளா!

உங்கள் பெருமையும், உயர்ந்த நோக்கமும் எங்கும் புகழும் இரக்கமும் பொறுமையும் அறிவும் ஆற்றலும், அன்பும் அடக்கமும் தெளிவான சொல்லும், சிரித்த புன்முறுவலும் அண்டினோர் தங்களை ஆதரித்திடுவதும் வரையாது கொடுக்கும், முறையான தர்மமும் வள்ளலென்றனேகர் வாழ்த்திப் புகழ்தலும், எண்ணிலாருங்களை, எதிர்த் தொழுதலும் மனச்சாக்ஷியை நீங்கள் மதித்து நடப்பதும் மானிட ஜென்மம் மாறவு றுதியால் புண்ணியமொன்றே, புரிவதென்றுறுதியும் தெய்வ பக்தியைத் தினம் மறவாதலும், தேசபக்தியிற் சிறந்து விளங்குதலும் இத் தகையான, இணையிலாக்குணங்களை உங்கள் பால்நிகழ, ஒவ்வொரு தினமும் கண்டு கண்டு நாங்கள், களிப்புறுகின்றோம்.

கற்றவர் போற்றுங் கருணைசேர் மகிபா!

கோவைமாநகர்ச், சேர்மனையமர்ந்து கல்வி யபிவிர்த்தியிற் கவனம் வைத்தீர், சுகாதார வசதி சுகம் பெறவமைத்தீர் பாதைகளை திருத்திப், பண்புடனமைத்தீர், ஆயுர்வேத வைத்தியம், ஆங்காங்கமைத்தீர், சித்தர் வைத்தியமும் சிறப்புடனமைத்தீர், டவுன் ஹாலதனில் தருமமாய்ச் ஜனங்கள் பத்திரிகைபடிக்கப் பாங்குடனமைத்தீர், எத்தனையோ இடுக்கண், எதிரிகள் விழைத்தும் அத்தனையும் சகித்து அதிகாமலிருந்து தண்ணீர்க்குழாயின் தகரார் தெளிவித்தீர் நகர நிர்வாகத்தை, நலம்பெற நடத்திய திறம்பலகண்டு தினம் மகிழ்வெய்தினோம்.

உண்மையே நிறைந்த உத்தமத் தலைவா!

ஜில்லாப் போர்டின், சிறந்த தலைமையை எத்தனை பேர்களோ, இச்சித்தலைந்தும் கவர்ன்மெண்டார்கள் கருணையோடுங்கள் பொதுநலமுணர்ந்து, பொருந்தவமைத்தனர். அதனையுமேற்று, அழுகற நடாத்தச் சொந்த வேலையென்பதைத் தூரவே தள்ளி அல்லும் பகலும் அரைநிமிஷ மேனும் ஓய்வொழிவின்றி ஊழியம் புரிகின்றீர். ஊருக்குழைக்கவே, உருவாகிவந்த உத்தமரென்றால் உங்களுக்கே தகும்.

அன்பே உருவாக அவதரித்த ஐயனே!

அயாத நிலைக்களத்தின் அட்வைசரி கமிட்டியில் அங்கத்தினராக, அமர்ந்திருக்கின்றீர். இந்தியமக்களுக்கு ஏற்படுங்குறைகளை அங்கம்போராடி, அகற்றுவீரென்று எங்கள்போன்றார்கள் எதிர்பார்க்கின்றோம்.

பக்தியிற் சிறந்த உத்தம பெரியீர்!

கல்விக்கென்றே கவர்ன்மெண்டாரமைத்த ஜில்லாக் கவுன்சிலில், சிறந்திருக்கின்றீர் கல்வியிலாநாடு, காடாகுமென்பதையும் இந்நாட்டிற் கல்வியிருக்கும் நிலையுணர்ந்தும் தங்களாலியன்ற, தாராளவுதவியைக் கல்வி யபிவிர்த்தியிற் காட்டுவீரென்று எல்லோரும் தங்களை, இனிது வேண்டுகின்றோம்.

கோவைமாநகர்க் குறைவிலா முடியே!

உங்கள் பெருங்குணங்களை, உரைத்தெடுத்துரைக்க எங்கள் போன்றோர்க்கியலாதாகையால் அகஸ்துதியாக, அறிந்து துரைத்தேன். முகஸ்துதியோவென, என்

## தேசோபகாரி.

நம் நாட்டில் நாளுக்குநாள் மேல் நாடுகளைப்போல் பத்திரிகைகள் பெருகிவருகின்றன. ஆனால் அவ்வாறு தோன்றும் பத்திரிகைகளில் நாட்டின் நலங்கருதி உண்மையான தொண்டாற்றி வருவதுதான் வழக்கமில்லாமலிருந்துவருகிறது. காரணமென்னவெனில் பத்திரிகைகள் ஆரம்பிக்கும் போது அதன் ஆசிரியர்கள் எவ்வளவு உண்மையான நோக்கத்தோடு ஆரம்பித்தாலும் ஆரம்பித்தபின்னர் பத்திரிகை வளர்ச்சியின் அவசியத்தை பத்திராதிபர் கருத வேண்டி வந்து விடுகிறது. பத்திரிகை வளர்ச்சியையும் அதனால் தமது கால க்ஷேமத்தையும் எதிர்பார்க்கும் பத்திராதிபர்கள் பத்திரிகையின் கொள்கைகளை தங்கள் மனச்சாட்சிப் படி நடத்திக் கொண்டுபோக முடிகிறதில்லை. அப்படிப்பட்ட பத்திரிகைகள் பொதுஜனங்களை சீர்திருத்தத் தமது கொள்கைகளை ஜனங்கள் பின்பற்றும்படி செய்யமுடியாமல் எந்த சமயத்தில் எப்படி நடந்தால் தனக்குப் பெரும்பான்மையான ஜனங்களின் ஆதரவும் செல்வாக்குள்ள ஜாதியாரின் தயவும் கிடைக்குமோ அப்படி நடந்துகொண்டு தனது மனச்சாக்ஷியை விற்றுவிடவேண்டி வருகிறது. இது நம் நாட்டின் துரதிஷ்டமே. தமிழர்களின் நலங்கருதி உண்மையாக உழைக்கும் பத்திரிகைகள் நாட்டிற் சொற்பமாயினும் ரங்கூனில் நடைபெற்று வரும் தேசோபகாரி என்னும் வாரத்திரத் தமிழ்ப் பத்திரிகையானது ஆரம்ப நிலையில் எவ்வாறிருப்பினும் நாளுக்கு நாள் நமக்கு அவசியமான சமத்துவத்தையும் சம உரிமையையும் ஆதரித்துவருவது பற்றி நாம் பெரிதும் மகிழ்வெய்துகிறோம். அதன் ஆசிரியர் ஒத்துழையாமைக் காலத்தில் சிறை சென்றவர் இன்னும் சிறையில் வதிகிறார் நல்ல தியாகம் செய்தவர். தேசோபகாரி வாரம் ஒரு முறையாயிருந்து வாரம் இருமுறையானதிலேயே பத்திரிகையின் வளர்ச்சி நமக்குப் புலப்படுகிறது. ஆகையால் ஷ பத்திரிகையை பொதுஜனங்கள் ஆதரிக்கக் கோருகிறோம்.

### கணபதிபாளையம் ஸ்ரீ யோகீச சைவ சித்தாந்த சன்மார்க்க சபை.

இச்சபையின் மூன்றாவது வருடக்கொண்டாட்டமும் ஸ்ரீமத் திருநாவுக்கரசு ஸ்வாமிகள் குருபூஜையும் அக்ஷய வருஷம் சித்திரை மாதம் 24-தேதி சதய நக்ஷத்திரத்திரத்தில் நடைபெறவேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறது.

ஜுவிர்களோமென் வித்துடன் முடித்து இன்னுமோர்முறை ஆசிரியர் சங்க, அமைச்சர்கள் சார்பாய் மீண்டும் தங்களுக்கு மிகுந்த வணக்கத்துடன் வந்தனம்கூறி, வரவேற்கின்றேன். அன்புடன் தாங்கள், அலைவத்தலைமையூண்டு எல்லாம்வல்ல, இறைவனருளால் எங்கள் சங்கத்தை இனிது நடத்தி மங்களம் உண்டாக்க மனதார் வேண்டுகிறோம். இப்படிக்கு,

பெருந்துறை உபாத்திமைச் சங்க அங்கத்தினர்.

## பிராமணரல்லாத ஓட்டர்களுக்கு எச்சரிக்கை.

(திராவிடன் எழுதுவது)

சமீபகாலத்தில் தென்னாட்டிலுள்ள பிராமணர்கள் காங்கிரஸ் போர்வையைப் போர்த்திக்கொண்டு சுயராஜ்ய வாதிகள் என்ற பெயரோடு வெளிக்கிளம்பி பிராமணரல்லாத ஓட்டர்களை ஏமாற்ற பிரசாரம் செய்யமுன் வந்துள்ளார்கள். இவர்களில் ஒரு பிராமணராவது தேசத்திற்கும் தேசமக்களுக்கும் பாடுபட யெண்ணமுடையவர்கள் இருக்கின்றார்களா, என்பதை நீங்கள் யோசித்துப்பார்க்க வேண்டியது உங்கள் கடமையாகும். மகாத்மா காந்தி அவர்கள் சத்தியாக்கிரக ஒத்துழையாமை இயக்க மாரம்பித்தகள்ளுக்கடை மறியல் செய்தகாலத்தில். தற்போது கள்ளிருந்த வெளிக்கிளம்பியுள்ள மைலாப்பூர் புரசைவாக்கம் மிஸ்டர் அய்யர் அய்யங்கார் அவர்களில் எத்தனை பேர்ஜெயிலுக்குப் போய் வந்துள்ளவர்களிருக்கின்றார்கள் என்பதை யோசித்துப்பாருங்கள். பிராமணர்கள் சொன்னதே சரியென்று சொல்லும் தலையாட்டி தம்பிரான்களாகிய பிராமணரல்லாதார் யெத்தனை பேர் அதில் சேர்ந்துள்ளார்கள் என்பதையும் யோசித்து பாருங்கள் நமது சென்னை ராஜதானியில் ஒத்துழையாமை இயக்கம் மும்முரமாய் நடந்து கொண்டிருக்கும் போது மிஸ்டர் ஸ்ரீனிவாஸ அய்யங்கார் மிஸ்டர் யம் கே ஆச்சாரி மிஸ்டர் சத்திய மூர்த்தி மிஸ்டர் எ. ரங்கசாமி அய்யங்கார் மிஸ்டர் புர்ருசத்திய நாராயஞ மிஸ்டர் கலியாணசுந்திர முதலியார் மிஸ்டர் வெங்கடாசலம் செட்டி ஜனாப்கள் ஷாபிகளும் உசேன்களும் எங்கு இருந்தார்கள் என்பதை நீங்கள் யோசித்து அவர்கள் உங்களை ஓட்கேட்கிறகாலத்தில் நீங்கள் அவர்களை கேட்க கோருகிறேன். அடுத்தாப்போல் உண்மையாக தேசத்திற்கு பாடுபட வேண்டுமென்ற யெண்ணத்தோடு பாடுபட்டு வந்த உண்மை தேசாபிமானிகள் திரு இராமசாமி நாயக்கர் டாக்டர் வரதராஜுலு நாயுடு வகைராக்கள் யாருமே சட்டசபைக்குபோக வேண்டுமென்ற யெண்ணமில்லாமலிருக்க இந்தபோலிதேசாபிமானிகள் ஜெயிலுக்குப்போன பிராமணரல்லாத வீரர்களின் பெயர்சொல்லிக் கொண்டு மானமில்லாமல் ஓட்டுகேட்க வந்துள்ளார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள கோருகிறேன்.

இந்தபிராமணர்கள் போல் தேசத்தைக் காட்டி கொடுத்தவர்கள் மற்ற எந்த நாட்டிலும் கிடையாதென்பதை நீங்கள் உணர வேண்டும். பாதகண்டத்திற்கே பலவழிகளிலும் கேடு செய்தவர்கள் இவர்களே ஆவார்கள். நமது ராஜாக்கள் காலத்தில் வகுப்பு பிரித்து ஒற்றுமையை கெடுத்தவர்களுமிவர்களே. மகம்மதியர் வெள்ளைக்காரர் முதலிய அன்னிய அரசாங்கங்கள் உள்வாவழி காட்டியவர்களும் இந்த பிராமண ஜாதியாரே யென்பதை நீங்கள் உணரவேண்டும் இவைகளுக்கு பூர்ணய்யர் சரித்திரம் போல் அநேக சரித்திரங்கள் புராணங்கள் மூலமாக காட்டலாம். தற்போது இந்தபிராமண ஜாதியார் சட்டசபைக்குள் நுழையவேண்டுமென்கிற கருத்து எதை உத்தேசித்த யென்பதை ஓட்டர்களாகிய நீங்கள் யோசிக்கவேண்டும் சர்க்காரார் ஆக்கிரமம் செய்கிறார்கள் என்று அதை தடுக்க சட்டசபைக்கு போகிறார்களா அல்லது பிராமணரல்லாதார் சட்டசபைக்கு போயிருக்கிறார்களே அவர்களை இந்த தடவை போகவிடக் கூடாதென்ற கெட்ட எண்ணத்தோடும் பொறாமையோடும் போகிறார்களா,யென்பதையும் யோசிக்க வேண்டும். தற்காலசட்டசபையில் பிராமணரல்லாத பிரதிநிதிகள் பெரும்பாலோர் போனகாரணத்தினாலும் பிராமணரல்லாத மந்திரிகள் யேற்பட்டதினாலும் மந்திரியாகிய பனகால்ராஜா அவர்கள் தேவஸ்தானசட்டமசோதா ஒன்றைக் கொண்டு வந்து சர்வமானியமாக கோவில் சத்திரம் சொத்துக்களை ஒரு கூட்டத்தாரே வயிறு வெடிக்க சாப்பிட்டுக் கொண்டிருந்ததையும் தாஸி குடிகளில் சிலவு செய்யாமல் மக்களாய் பிறந்த சகல இந்துக்களும் சமானமாய் அனுபவிக்கவேண்டுமென்கிற மசோதாவை கொண்டுவந்து நிறைவேற்றியதினுடைய வயிற்றெரிச்சலால் தற்போது சட்டசபைக்குப்போய் தாமேமந்திரி பதவிகள் பெற்று தேவஸ்தான மசோதாவை ரத்து செய்யவேண்டுமென்ற உள் கருத்தோடு சட்டசபைக்கு போகவேண்டுமென்ற கருத்தோடு காங்கிரஸ் போர்வையை போர்த்திக்கொண்டு வெளிக்கிளம்பியுள்ளார்கள் என்பதை ஓட்டர்கள் மறக்காமல் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்! பிராமணர்களின் இரண்டாவது கருத்து என்னவென்றால் தாலூகா, ஜில்லா போர்டுகளிலும் முனிசிபாலிடி யூனியன்களிலும் நம்மவர்களே பெரும்பாலோராகப் போன காரணத்தினால் அதிலுள்ள சில உத்தியோகங்கள் பிராமணரல்லாதாருக்கு கிடைத்திருக்கின்றன. அவைகளையும் இந்த பிராமண ஜாதியாரே கைப்பற்றவேண்டுமென்ற ; யெண்ணத்தோடும் வெளிக் கிளம்பியுள்ளார்கள் யென்பதையும் கவனத்தில் வைத்துக்கொள்ளக் கோருகிறேன் கவர்ன்மெண்டிடத்தில் வெறுப்புடையவர்கள் என்று சொல்லிக்கொள்வது [illegible] கவர்ன்மெண்டிலுள்ள உத்தியோகங்களில் தோட்டிமுதல் தொண்டமான்வரையில் பிராமண ஜாதியாரே அனுபவித்துக்கொண்டு ஐரோப்பியர்களுக்கு தாமே அடிமைகளாயிருந்தும் கவர்ன்மெண்டை தாங்கிக்கொண் டிருப்பதை மறந்து விட்டு பிராமணரல்லாதாரை குறைகூற முன்வந்தது யோக்கியமல்லவென்பதை ஓட்டர்கள் அறியவேண்டும். மகாத்மா காந்தி அவர்கள் ஒத்துழையாமை இயக்கம் நடத்தும்போது மிஸ்டர் ஸ்ரீனிவாச அய்யங்கார் சென்னை கவர்ன்மெண்டில் அட்வகேட் ஜனரலாயிருந்து சம்பளம் பெற்றுக்கொண்டு [illegible] சேரில் உட்கார்ந்துகொண்டு ஒத்துழையாமை இயக்கத்திலுள்ளவர்களை ஜெயிலுக்கு அனுப்பலாமா வேண்டாமாவென்று சர்க்காரார் யோசனை கேட்கும்போது அனுப்பலாமென்று யோசனை சொல்லிக்கொண்டிருந்த இவர் ஜஸ்டிஸ் பார்டியார் கவர்ன்மெண்டுக்கு துணையாயிருந்து ஜெயிலுக்கு போகும்படி செய்தார்களென்று சொல்ல முன்வந்த அய்யங்கார் அய்யர்களைப்பற்றி நாம் என்ன சொல்லுவதோ தெரியவில்லை. சத்தியாக்கிரகத்தோடு ஒத்துழையாமை இயக்கத்தை நடத்திக்கொண்டுவந்த காலத்தில் சம்பளம் பெற்றுக்கொண்டிருந்த மிஸ்டர் ஸ்ரீனிவாசய்யங்கார் தற்போது பெருத்த தேசாபிமானி ஆய்விட்டார் போலும். தேவஸ்தான மசோதாவை எப்படியாவது ரத்து செய்ய வேண்டுமென்றும் மடாதிபதிகள் மகந்துகள் மூலமாய் ஐகோர்ட்டில்வழக்கு தொடங்கச் செய்து தான் வக்கீலாயிருந்து பீஸ்பெற்று கேசு நடத்த முன்வந்திருப்பதை ஓட்டர்கள் அறிந்துகொள்ளவேண்டும். இனி சத்தியமூர்த்தியோ செனட்டில் தமிழ்நாட்டிற்கு தனித் தமிழ் கழகம் வேண்டாம் அதற்குதமிழ்நாடு லாயக்கில்லையென்று சொன்னவர். மிஸ்டர் எம். கே. ஆச்சாரியார், மிஸ்டர் ராஜகோபாலாச்சாரி வகைராக்கள் தமிழ் குருகுலத்தில் பிராமணரல்லாத மாணவர்களோடு சமபந்தி போஜனம் சமபடிப்புவேண்டியதில்லை என்று சொன்னவர்கள் இவர்கள் எப்படி தேசாபிமானிகள் ஆவார்கள்? இவர்கள் சட்டசபைக்கு வந்து பிராமணரல்லாதாருக்கு யென்ன நன்மை செய்வார்கள்? யென்பதை யோசித்து பாருங்கள். பிராமண ஜாதியார் வெளிகிளம்பி ஆர்பாடம் செய்வதெல்லாம், பிராமண ராஜ்யத்தை நிலைநாட்ட பாடுபட வந்திருக்கின்றார்கள் என்பதை பிராமணரல்லாத ஓட்டர்கள் அறிந்துகொண்டு பிராமணர் எவராயிருந்தாலும் ஓட்டுகொடுக்காமல் பிராமண ஓட்டர்களிடத்தில் போய் ஓட் கேட்கும்படி புத்தி சொல்லி அனுப்பி விடுங்கள்.

காங்கிரஸ் போர்வையைப்போர்த்திக்கொண்டு ஓட் கேட்கவரும் பிராமண ஜாதியாருக்கு ஓட்கொடுக்காதீர்கள். சுமார் 150-வருஷ காலமாக அரசாங்கத்தில் தோட்டிமுதல் தொண்டமான் வரையில் உத்தியோக பதவிகளிலிருந்து பிராமணரல்லாதாராகிய நமக்கு என்ன நன்மை செய்திருக்கிறார்கள் யென்பதை யோசித்து பாருங்கள் பிராமணரல்லாதார் சட்டசபைக்கு போனதினால் தான் கல்வி கைத்தொழில் தேவஸ்தானங்களில் சமஉரிமைவேண்டுமென்ற தீர்மானங்களை கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளார் கல்விச்சாலையாகிய யூனிவர்சிடி பிராமண அக்கிரகாரமாய் இருப்பதைஉடைக்க நம்மவர்கள் முயற்சிசெய்து அதில் கொஞ்சம் நன்மை பெற்றுள்ளார்கள். அடுத்த தேர்தலில் வகுப்பு நலத்தில் அக்கரை உள்ள பிராமணரல்லாதாருக்கே ஓட் கொடுத்து சட்டசபைக்கு அனுப்புங்கள் காங்கிரஸ் போர்வை போர்த்திகொண்டிருக்கும் மைலாப்பூர் புரசவாக்கம் பிராமணர்களுக்கு ஓட் கொடுத்தீர்களோ பிராமண ராஜ்யம் வந்துவிடும் யென்று மனதில் வைத்துக் கொண்டு பிராமணரல்லாதாருக்கே ஓட் கொடுத்து சட்ட சபைக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(திராவிடன்)

## பிரமேக குல சம்ஹாரி.

பலவித கிரந்தித் தடிப்புகள், 21 வித மேகரோகம், 7-வித வெள்ளைரோகம் ரணம் அரையாப்பு, சூலை, வாத முதலிய தீராத கொடிய ரோகங்களையும் ஐந்தே தினத்தில் நீக்குகிறது. புட்டி 1-க்கு ரூ. 2. ஏஜண்டுகள் தேவை. கேட்லாக் இனாம்.

ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை,
திருச்செங்கோடு. (தென் இந்தியா)

## மதிமோச விளக்கம்.

உலகானுபவம் பெறவேண்டுமானால், உடனே "மதிமோச விளக்கம்" என்னும் புஸ்தகத்தைவாசியுங்கள். இதில் உலகத்தில் நடக்கும், பல வகை மோசங்கள் வெட்டவெளி வாய் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலைப் படிப்பவர்கள் மோசக்காரர்களிடம் ஏமாறாமல் தப்பித்கொள்வார்கள் என்பது திண்ணம். இது படிக்கப் படிக்க மிகவும் இன்பமாய் இருப்பதன்றி விடா நகைப்பையும் விளைவிக்கும், நமது பெண்கள் இப்புத்தகத்தை படித்தால் குருட்டு நம்பிக்கை என்பது இந்நாட்டை விட்டு ஓடிப்போகும். 230 பக்கங்கள், 120 மோசங்கள் அடங்கியிருக்கின்றன. விலை ரூ. 1—0—0 வி. பி. சார்ஜ் வேறு.

விலாசம்:—

ஜி. செல்வபதி செட்டி அண்டு கோ.,
பெரம்பூர் பாரக்ஸ், மதராஸ்.

---

## சேலம் பனியன்கள்.

எங்களிடம் பல மாதிரியான பனியன்கள் தயார் செய்யப்படுகிறது. வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன். இதர விஷயங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

விக்டோரியா நிட்டிங் பாக்டெரி,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

---

## "ஐஸ்வரிய இரகசியம்"

என்னும் புத்தகம் முற்றிலும் இனாம்!

ஐஸ்வரியம் அடையும் இரகசியத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. உடனே எழுதுங்கள்—மறந்துவிடவேண்டாம்.

ஆர்ட் புக்ஸ் பப்ளிஷிங் கம்பெனி,
25, தெப்பக்குளம், திருச்சி.

---

## கவனித்து வாசியுங்கள்.

டாக்டர் பார்த் என்பவரின் ஜெர்ம்கில்லர் சோப் ஆறாத ரணங்கள், புண், சொறி, சிரங்கு, முகப்பருவு, தேமல், படை, மேகப்புண், மேகத்தினால் உண்டாகும் சகலவித சர்ம வியாதிகள், நமைச்சல் இன்னும் அநேகவித சர்ம வியாதிகளை ஆச்சரியமாய் குணப்படுத்தும். முகப்பருவுகளை வெகுசீக்கிரத்தில் போக்கடிக்கும் நூற்றுக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் இருக்கின்றன.

6-சோப் அடங்கிய பெட்டி 1-க்கு விலை ரூ. 2—8—0 தபால், பாக்கிங் கூலி வேறு. வேண்டியோர்,

பி. எஸ். பொம்மையா, அண்டுகோ.,
தபால் பெட்டி 198 மதராஸ்.
என்றெழுதி பெற்றுக்கொள்ளவும்.

---

## தமிழர்.

ஓர் உயரிய மாத வெளியீடு. அறிவு ஆராய்ச்சித் துறைகளில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளைக் கொண்டது.

இராயல் பதிப்பு:—

| | |
|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ. 2—8—0 |
| வெளிநாட்டிற்கு | ரூ. 3—0—0 |
| சாதாரண பதிப்பு | ரூ. 2—0—0 |

விலாசம்:—

அமைச்சர்
"தமிழர் நிலையம்"
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

---

## குடி அரசு பத்திரிகை,

கிடைக்குமிடம்.

ரயில்வே பிளாட்பாரங்களிலுள்ள ஹிக்கின்பாதம் கம்பெனி புஸ்தக சாலைகளிலும்,

கோயமுத்தூர்—ஸ்ரீ எ. ஆர். சிவானந்த முதலியார்.
சேலம்—ஸ்ரீ ராமானுஜ புக்டிபோ.
திருப்பூர்—ஸ்ரீ என். ராமசாமிநாயக்கர் மானேஜர் காந்திகதராலயம்.
திருச்சி—ஸ்ரீ எஸ். மாசிலாமணி பிள்ளை திருச்சி கோட்டை.
கும்பகோணம்—ஸ்ரீ என். பக்கிரிசாமி பிள்ளை ஆரியன் பிரஸ்.
திருவாரூர்—ஸ்ரீ வி. எஸ். ராமன் தேசாபிமான சங்கம்.
நாகபட்டணம்—ஸ்ரீ எ. சக்கரபாணி பிள்ளை சன்னரப்பட்டரை.
மதுரை— நியூஸ் ஏஜண்டு சவிளிங் பஜார்.
விருதுபட்டி—ஸ்ரீ பி. பழனிக்குமார பிள்ளை.
மதராஸ்—நியூஸ் அட்வர்டைஸிங் ஏஜண்டு நெ. 31 நம்பூலியர் வீதி.
கோலார்—ஸ்ரீ ப. மு. ராஜரத்தினம் சித்தார்த்த புஸ்தகசாலை சாம்பியன் ரீப்ஸ் கே. ஜி. எப்.
தூத்துக்குடி—நியூஸ் ஏஜண்டு.
ஈப்போ—ஸ்ரீ எம். என். பிள்ளை போர்சியோ - மோட்டார் (லிமிட்டெட்).
சிங்கப்பூர்—பிரிட்டிஷ் அமெரிக்கன் நியூஸ் ஏஜன்ஸி நெ. 6 பேட்டர் ரோட்.

மற்ற ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

---

## உண்மையான கதர்! கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை; தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடன் நடைபெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.)

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கைநூலால், கைத்தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி,
மானேஜர், ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்

---

என்றுமறியாத இணையில்லா கீர்த்தி

எங்கள்

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

அஜீரணம், மலச்சிக்கல், நரம்புகளின்தளர்ச்சி, கைகால் ஓய்ச்சல், ஞாபகமின்மை முதலிய வியாதிகளைக் குணப்படுத்துவதில் சென்ற 45 வருஷகாலமாக என்றுமறியா இணையில்லா கீர்த்தியை யடைந்திருக்கிறது. நாங்கள் கேட்காமலே எங்களுக்கு வந்துகொண்டிருக்கும் நற்சாக்ஷிப் பத்திரங்களே போதுமான சான்றாகும் இன்றைக்கே உபயோகித்து குணத்தை யறியுங்கள்.

32 மாத்திரைகள் அடங்கிய
டப்பி ரூ. 1-க்கு 1—0—0.

விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்:—ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

---

## இந்தியர் கஷ்ட நிவாரண பாங்கு "லிமிடெட்" கோயமுத்தூர்.

காப்பு நிதியம்—ரூ. 2,706.
மூல திரவியம் ரூ. 5,00,000.
வெளியிடப்பட்டது —ரூ. 64,600.
வசூலிக்கப்பட்டது —ரூ. 35,540.
டிபாசிட்டுகள் ரூ. 42,012-14-0.

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு.

இரண்டு வருஷ, கெடுவு வட்டி.

100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0

இதற்கு பிரதி மாதமாய் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு.

ஒரு வருஷ கெடுவு, வட்டி.

100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 6—12—0

இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறை யாவதும் வருஷத்திற்கொருமுறையாவதும் வட்டி கொடுக்கப்படும்.

ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-26-உ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும். குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0, 1—0—0) ரூபாயுக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அதிக சௌகரியமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளினாலேயும், மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும், முயற்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வருஷத்திலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. இதுவரை யாதொருபோக்குக்குத்தியில்லாமலும் இருப்பதிலிருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப் பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை, டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும், இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கும் யாதொரு சந்தேகமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி. ராமச்சந்திர செட்டி,
10—2—26. மானேஜிங் டைரக்டர்.

---

ஈரோடு குடி அரசு பிரஸ்ஸில் (லிமிடெட்) பிரசுரிக்கப்பட்டு அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.